Regd. No. M. 2797 (விலை அணா ஒன்று.)

VARTHAGA OOLIAN.

மலர் 1.] …ப்பள்ளி பிப்ரவரி௴ 1933 [இதழ் 8

Trichinopoly ஆசிரியர்:—திரு. டி. வி. கே. நாயு… February 1933

வர்த்தக முன்னேற்றங் கருதி
வெளிவரும் மாதப் பத்திரிகை.

OFFICE OF THE REGISTRAR … 15 MAR 1933 MADRAS

SRINIVAS… PRESS ARTISTIC COLOUR PRINTERS, … TRICHINOPOLY.

அட்டவணை.

வரிப்பளுவு	3
வியாபாரத் துணுக்குகள்	4
ரயில்வே ரேட்டுகளும் ரயில்வே பகுதியும்	6
இந்தியத் தங்க மெங்கே?	8
வர்த்தகர்களுக்கு கவர்னர் உபதேசம்	10
ராஜம் (கதை) ....,	13
Governor's Advice to Traders	16
நாணய மாற்றம்	19
சர்க்காரின் புதிய கடன்	19

வியாபாரத்திற்கழகு — —
— — விளம்பரஞ் செய்தல்.

Broadcast your business messages — —
— — through "Varthaga Oolian"

…JOURNAL

…MENT

S. RETHINAVELU CHETTY,

SHROFF MERCHANT,
BIG BAZAAR STREET, TRICHINOPOLY,

All kinds of Jewels set with No. 1 Indian Chemical Diamond, the best in the Market, can be Supplied at cheap rates.

சீ.ரெத்தினவேலுசெட்டி

ஷராப் வியாபாரம், பெரியகடைவீதி திருச்சி.

நெ. 1 இந்தியன் கெமிகல் டைமண்...

குணத்தில் சிறந்தது. விலையில் குறைந்...
எமது மேற்பார்வையில் தயார் செ... ...தேர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு
கற்கள் உறுதியிலும் பிர... ...டது. நெ. 1 இந்தியன் கெமிக்கல் டைமண்டு
முறை வரவ... ...ம் அசல் வைரங்களுக்கு ஒப்பாக விளங்குகின்றன. ஒரு
கற்க... ...பார்த்தால் உண்மை விளங்கும் 1நெ. இந்தியன் கெமிகல் டைமண்டு
...காண்டு பவுனில் கட்டப்பட்ட பலவிதமான நகைகளும் அசல் 1நெ. ரங்கூன் புது
வைரங்கள் இமிடேஷன் புஷ்பராகம் தளுக்கு படிக்கம் இமிடேஷன் பட்டை, சிகப்பு, பூரு
பச்சை பிளேன் பட்டை சிகப்பு, நீலம் திரிகலர், பச்சை முதலிய கற்களும் வர்ணத்தகடு
கள் முதலியவைகளும் சரக்கு சுத்தமாயும் விலை சரசமாயும் எம்மிடம் கிடைக்கும்.
மேற்கூறிய தினுசுகளில் 2-ம் நெ. கற்களும் கைவசமிருக்கின்றன.
வெளியூர் ஆர்டர்களை உடனுக்குடன் கவனித்து அனுப்பப்படும் விலை விபரங்களுக்கு எழுதுக.

இனம்! இனம்!!

என் அனுபவசாஸ்திரீய
தேகாப்பியாச முறை

இது எல்லோருக்கும் இனமாக அளிக்கப்படும்.

இப்புத்தகத்தில் தேகாப்பியாச முறையைப்பற்றி நன்றாக விவரித்து எழுதப்பட்டிருக்கின்றது. இது தவிர என்னுடையதும் மற்றும் என்னுடைய சிஷ்யர்களுடையதுமான அநேக புகைப்படங்கள் தெளிவாக அச்சிடப்பட்டிருக்கின்றன. எவன் தன் தேகத்தை அபிவிருத்தி செய்து ஆரோக்கியமாக இருக்க விரும்புகிறானோ அவன் இப்...த்தகத்தை வாசிக்க வேண்டும்.

ரெ... ...ந்திய
து...

சிதம்பரம்

ஆனித் திருமஞ்சன உற்சவத்திற்கு விஜயம் செய்யுங்கள்.

(21-6-33 முதல் 1-7-33.)

ரிஷப வாகனம்	—	25-6-33
ரதோற்சவம்	—	29-6-33
ஆனி திருமஞ்சனம்	—	30-6-33
புஷ்ப பல்லக்கு	—	1-7-33

தென்னிந்திய ரயில்வே கம்பெனி லிமிடெட்.,

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது.)

இந்தியா கவர்ன்மெண்ட் போஸ்டாபீஸ்

= காஷ் =

ஸர்ட்டிபிகேட்டுகள்.

ரூ. **8-4-0**க்கு ரூ. **10, 5**-வருஷத்தில் கிடைக்கும்.

வருமான வரியின்றி

100-க்கு **4** விகிதம். வட்டிக்கு வட்டி தரும்.

தேவையானால் ஒருவருஷத்திற்குப் பிறகு வட்டி யுடன் ரொக்கமாகத் திருப்பிக் கொடுக்கப்படும்.

ஒருவர் ரூபா 10,000-வரைக்கும்

ஸர்ட்டிபிகேட்டுகள் பெறலாம்.

காஷ் ஸர்ட்டிபிகேட்

எடுத்துக்கொள்ள, பிரதி மாதமும் ஒரு தொகையை மிச்சப்படுத்தி தனியாக வையுங்கள்.

1933-ஷூ ஜூன்-மாதம் **1**-ந் தேதியன்றோ அதற்குப்பிறகோ இப்பொழுதுள்ள வட்டிவிகிதம் மாற்றப்படக்கூடியதற்கு முந்தி 5-வருஷகாலம் முடிந்து ரொக்கத்தைப் பெற்றுக் கொள்ளத் தகுதியடையக்கூடிய ரொக்க ஸர்ட்டிபிகேட்டுகளை உடையவர்கள் இஷ்டப்படின், மறுபடியும் ஐந்து வருஷகாலம், வட்டிக்கு அத்தொகைகளைப் போட்டு வைத்திருக்கலாம். ரூ 10-மதிப்புள்ள அவ்வகை காஷ் ஸர்ட்டிபிகேட்டுக்கு ஐந்துவருஷத்தில் ரூ. 12-4-0 கிடைக்கும்.

போஸ்டாபீஸ் சேவிங்ஸ் பாங்கியில் தமது கணக்கிலுள்ள பணத்தைக்கொண்டு காஷ் ஸர்ட்டிபிகேட்டுகள் வாங்க விரும்பும் சேவிங்ஸ் பாங்கி டிபாசிட்டர்கள், சேவிங்ஸ் பாங்கியிலிருந்து பணத்தை வாங்கி மீண்டும் தபாலாபீஸில் கட்டவேண்டியதில்லை; ஸர்ட்டிபிகேட்டை வாங்குவதற்கான தமது விண்ணப்பத்துடன் பாஸ் புஸ்தகத்தையும், அதனுடன் பணத்தை திரும்பி வாங்குவதற்கான விண்ணப்பத்தில் கையொப்பமிட்டு அதையும் ஆஜர் செய்தால் போதுமானது.

எல்லா தபாலாபீஸ்களிலும் இதைப்பற்றிய விவரங்கள் கிடைக்கும்.

Printed at the Sri Nilayam Press, Trichinopoly. Edited and published by T. V. K. Naidu at the office of "Varthaga Oolian" S. [illegible] S. Buildings, Big Bazaar St, Trichinopoly.

வர்த்தக ஊழியன்

திருச்சினாப்பள்ளி

1933-௵ பிப்ரவரி-௴

வரிப்பளுவு.

(Burden of Taxation.)

இந்தியாவில் பல பாகங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கும்வியாபார சங்கங்களின் மகாநாடு இவ்வருடம் ஜனவரி மாதத்தில் கல்கத்தாவில் நடைபெற்றது. அந்தமகாநாட்டை வங்காள கவர்னர் சர் ஜான் ஆண்டர்சன் திறந்து வைத்தபொழுது வியாபார உலகில் சென்ற சில காலமாக கட்டுப்பாடான முறையில் தலையிடப்பட்டு வந்ததற்குப் பின்னர் கூடியவரைபழையநிலைமை ஏற்பட்டிருக்கிறதென்றும், தற்பொழுது மிகக்குறைந்த வட்டிக்கு கிடைக்கும் ஏராளமான பணம் ஸ்திரமான நிலை ஏற்பட்டதின் மேல்வியாபாரமுன்னேற்றத்திற்கு உதவியாயிருக்குமென்றும், புதிய அரசியல் திட்டத்தில் வியாபார சமத்துவ கொள்கை அனுஷ்டிக்கவும், சர்க்கார் நலமும், வர்த்தகர்கள் நலமும், இதன் மூலம் ஜனங்கள் நலமும் பொறுத்திருக்கும் சர்வதேசிய மதிப்பை இந்தியாவுக்கு அவசியமிருக்கும்படி திட்டமான பிரிவுகள் சேர்க்கப்பட்டிருக்கிறதாவென்று வர்த்தகர்கள் கவனிக்கவேண்டுமென்றும், சொல்லியிருப்பதை வர்த்தகர்கள் ஆழ்ந்து கவனிக்க வேண்டுகிறோம்.

மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்களும் நடைபெற்ற சொற்பொழிவுகளையும், கவனிக்குமிடத்து இந்திய பொதுஜனங்களின் அனுதாபத்தை எதிர்பார்த்தனவைகளாகவே யிருக்கின்றன. மகாநாட்டின் முக்கிய தீர்மானம் வரிச்சுமையைப்பற்றியதாகும்:—

"இந்தியாவில் வர்த்தகம், கைத்தொழில் இவைகள் மீது இருந்துவரும் தாங்க முடியாத வரிச் சுமையை, இந்திய சர்க்காருக்கு இந்த மகாநாடு எடுத்துக் காட்டுவதுடன் செல்வநிலையில் எதுவும் அபிவிருத்தி ஏற்படும்பொழுது முதல்முதலாக இவ்வரிச்சுமையைக் குறைக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இம் மகாநாடு தெரிவித்துக்கொள்ளுகிறது"

வர்த்தகர்களுக்கு ஏற்பட்டிருக்கும் வரிகளோ தாங்கமுடியாதவை. வர்த்தகர்கள் இதை நன்குணர்ந்து அவர்களுடைய மகாநாட்டில் மேற்கண்ட தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறார்கள். வர்த்தகர்கள் முன்னிருந்த நிலைமையை அடைய வேண்டுமானால் முதல் முதலாக அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும்வருமானவரியை உடனே குறைக்கவேண்டும். உத்தியோகஸ்தர்களுக்கு வருமானவரி ஏற்படுத்தியிருந்தாலும் வர்த்தகர்கள் கஷ்டப்படுவதுபோல் உத்தியோகஸ்தர்கள்கஷ்டப்படமாட்டார்கள். வர்த்தகர்களுடைய வருமானமோ இப்பொழுது 100-க்கு 100-வரை குறைந்துபோய் விட்டதையும் ஷைமகாநாட்டின் தலைவர் சர் பெந்தால் நன்றாய் எடுத்துக் காட்டியிருக்கின்றார். அவர், மேலும் குறிப்பிட்டிருந்ததாவது "அவர்களுடை வரிப்பளுவை குறைக்காவிட்டால் வர்த்தகம் சுவாசிக்க இடமின்று மாண்டுபோய் விடும்" அதிகாரிகள் இவருடைய பொன் போன்ற மொழிகளை நன்கு கவனித்து வேண்டிய பரிகாரம் தேடுவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

ஷை மகாநாட்டில் பிரசன்னமாயிருந்த இந்திய கவர்ன்மெண்ட் நிதி மெம்பர் கவர்ன்மெண்டின் உத்தேசங்களையும் எடுத்துச் சொல்லிவர்த்தகர்களே இன்னின்ன விதத்தில் கஷ்டங்களை நிவர்த்திக்கலாமென்று யோசனை சொன்னால் அவர் கவனிப்பதாகத் தெரிவித்திருக்கின்றார். 1933-34ம் வருஷத்து பட்ஜட்டில் என்னென்ன புது வரிகள் வர்த்தகர்களுக்காக போடப்படுமோ தெரியாது. சமீபத்தில் ஒட்டவா மகாநாட்டின் ஒப்பந்தப்படி இறக்குமதி வரிகள் உயர்ந்துவிட்டன. இதனால் வர்த்தகர்களுக்கு பாதகம் ஏற்பட்டுவிட்டது. ஆகையால் இனிபாகிலும் வர்த்தகர்கள் அசிரத்தைபாக இராமல் அவரவர்கள் சங்கங்கள் மூலமாக வரிப்பளுவை இன்னின்ன விதங்களில் குறைக்கலாமென்று யோசனை சொல்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

ஷை மகாநாட்டில் ஐரோப்பிய வர்த்தக சங்கத்தின் பிரதிநிதிகள் கூடி அவர்களுடைய குறைகளை நீக்கிக்கொள்வது போல இந்திய வர்த்தகர்களும் வருடா வருடம் கூட்டங்கள் கூடி இந்திய வர்த்தகர்களுக்கு ஏற்படுகின்ற கஷ்டங்களை நிவர்த்திக்க வழிகளை ஆலோசிக்க வேண்டுமென்பதையும் வர்த்தர்களுக்கு நினைப்பூட்டுகிறோம். இந்திய வர்த்தகர்களும், ஐரோப்பிய வர்த்தகர்களும்சேர்ந்து அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தினால் பரிகாரம் சீக்கிரம் கிடைக்குமென்பதற்கு ஆக்ஷேபனை யிருக்காது.

ஒவ்வொரு மாகாணங்களிலும் ஐரோப்பிய வர்த்தக சங்கங்கள் போல மாகாணசங்கங்கள், ஜில்லா சங்கங்கள், தாலூகா கிளைச் சங்கங்கள் முதலானவைகள் ஏற்பட்டாலொழிய வர்த்தகர்களின் குறைகள் நிவர்த்திக்க முடியாதென்பது எமது துணிபு.

வியாபாரத் துணுக்குகள்.

(Trade Tit Bits.)

* * *

1932-33ம் வருடத்தில் அமெரிக்காவில் 845000 எக்கரில் 16,958,000 சென்டால் அரிசி விளைவை எதிர்பார்க்கப்படுகிறது (சென்டால் என்பது 100 பவுன் எடை) இட்டாலியில் 330,000 எக்கரில் 13,733,000 சென்டால் எதிர்பார்க்கப்படுகிறது.

* * *

பிரிட்டிஷ் ஏற்றுமதிகள் யுனைடெட் ஸ்டேட்ஸ் ஏற்றுமதிகளைத்தவிர மற்ற தேசங்களைவிட அதிகமாகவிருப்பதாகவும், ஸ்டர்லிங் தங்கமதிப்பு கணக்கிலிருந்தால் இது அமெரிக்கத் தொகையைவிட அதிகமாகவிருக்குமென்றும் பிரிட்டிஷ் வியாபாரம் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கதென்றும் 'டெய்லி டெலிகிராப்' பத்திரிகை கூறுகிறது.

* * *

1932-ல் பிரிட்டிஷ் இறக்குமதிகள் 703133000 பவுன்களாகும். 1931-ல் இது 862175000 பவுன்களாகவிருந்தது. 1932-ல் பிரிட்டிஷ் ஏற்றுமதிகள் 365138000 பவுன்களாகும். 1931 இத்தொகை 389164000 பவுன்களாகும். மறு ஏற்றுமதிகள் 50914000 பவுன்களாகும் 1931ல் இது 64035000 பவுன்களாகும்.

* * *

மலபாரில் 1932ம் வருடத்தில் 13000 எக்கர் இஞ்சி சாகுபடி செய்யப்பட்டது. அதற்கு முந்தின வருடத்தில் 10635 எக்கர். 3700 டன் சுக்கு கிடைக்குமென்றும், முந்தின வருடத்தைவிட 200 டன் குறைவென்றும் தெரிகிறது 500 பவுன் எடையுள்ள ஒரு கண்டி 34 ரூபாய் முதல் 38 ரூபாய் வரையில் விற்றது.

* * *

1932-ம் வருடத்தில் மிளகு சாகுபடி மலபாரில் 80,000 எக்கரும் தென் கன்னடத்தில் 7700 எக்கரும் சாகுபடி செய்யப்பட்டன. முந்தின வருடத்தில் மலபாரில் 83409 எக்கரும், தென் கன்னடத்தில் 7534 எக்கரும் சாகுபடி செய்யப்பட்டன. மலபாரில் அக்டோபர், நவம்பர் மாதங்களில் மழை பெய்ததின் காரணமாக போள்ளு என்ற நோய் பரவி சாகுபடிக்கு சேதமுண்டாக்கியது. தற்கால விலை ஒரு கண்டி 117 முதல் 125 ரூபாயாக விற்றது.

* * *

1932ம் வருடம் டிசம்பர் மாதம் 22உ யோடு முடிவான காலத்தில் 1,74,75,40,920 ரூபாய் மதிப்புள்ள கரென்சி நோட்டுகள் வெளியில் செலாமணியிலிருந்தது. நாணயங்கள் அதேகாலத்தில் வெள்ளி நாணயம் 98,23,37,609 தங்கம் 18,54,54,455, வெள்ளி. 13,25,59,210 மொத்தம் 1,30,03,51,364, பாக்கி 44,71,89,556 சிகியூரிட்டிகளிலிருக்கின்றன.

* * *

உலகத்தில் சர்க்கரை உற்பத்தி 1931-32ம் வருடத்தில் 26,398,000 டன். கூபா 2584000 டன். லவுசியானு 213,000 டன். ஹாவாயியன் தீவு 838,000; போர்ட்டோ ரீகோ 992,000; ஆர்ஜன் டைன் 346000. நேட்டால் 359,000; மொரிசீயஸ் 230,000 ஜாவா 1,350,000; பார்மோசா 962,000; ஐரோப்பாவில் மட்டும் 7397,000 டன் 1932-33ம் வருடத்தில் எதிர்பார்க்கப்படுகிறது.

* * *

லண்டனில் ஜனவரி மாதம் 23உ நடைபெற்ற கூட்டத்தில் திரு. ஆர். டபிள்யூ. பிராக் என்பவர் இந்தியா துணி இறக்குமதி செய்வதை இன்னும் பத்து வருஷ காலத்தில் அடியோடு நிறுத்திவிடுமென்றும், இந்தியர் உபயோகிக்கும் ஒவ்வொரு நான்கு கஜத் துணியிலும் மூன்று கஜங்கள் சுதேச ஆலைகளாலும் எஞ்சியுள்ள ஒரு கஜத்தில் அரை கஜம் லங்காஷயராலும் அரை கஜம் ஜப்பானாலும் சப்ளை செய்யப்படுவதாகும். இம் மாறுதலுக்கு அரசியல் மாச்சர்யத்தைவிட இந்திய ஆலைத் தொழிலின் விரைவான முன்னேற்றமே காரணமாகுமென்றும், இந்தியாவின் தங்கம் மறைவிடங்களிலிருந்து வெளியாகி ஏற்றுமதி செய்யப்படும் சந்தர்ப்பங்களைக் கொண்டு இந்தியாவில் எவ்வளவு கஷ்டமிருக்கிறதென்று தெரிவதாகவும், உலக வியாபார அபிவிருத்தியால்தான் இக்கஷ்டங்கள் தீருமென்றும், சொன்னார்.

* * *

உலக வியாபார மந்தத்தைத் தீர்ப்பதற்கான வழிகளைப்பற்றி ஸர் ராபர்ட் ஹாரன் டண்டியில் பிரஸங்கம் செய்கையில் பின்வருமாறு கூறினார்:—

விலைவாசிகள் உயரவேண்டியது மிகவும் அவசியமாகும். மாக்மில்லன் கமிட்டி கூறுகிறபடி சரக்குகளின் மொத்த விலை வாசிகளை உயர்த்த வேண்டியதே கவர்ன்மெண்டின் நோக்கமாகும். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டு அது விஷயமாக அனுஸரிக்கும் கொள்கையானது மிகவும் புத்திசாலித்தனமானது. விலைவாசிகள் உயர்வதால் செலவுகளும் லாபமும் அதிகமாகிறது. விலைவாசிகள் இறங்கிவிட்டால் லாபங் கிடைக்காமல் செலவுக்குச் சரியாக வருமானமும் கிடைப்பதில்லை. பணமுதல் முழுவதும் உபயோகிக்கப்பட்டு விட்டது. வியாபாரம் நின்று விட்டது. வேலையில்லாக் கஷ்டமேற்பட்டு விட்டது. ஆனால் விலை வாசிகள் உயர்வது வேறு விஷயங்களில் சார்ந்திருக்கிறது. விற்பனைச் சரக்குகள் கடனாக அனுப்பப்பட வேண்டும். அவ்விதம் அனுப்புவதற்கு நம்பிக்கையிருக்க வேண்டும். உலகத்திலுள்ள பற்பல தேசங்கள் சிக்கலான விஷயங்களைத் தீர்ப்பதால் இந்த நம்பிக்கையேற்பட வேண்டும். சிக்கலான விஷயங்களில் யுத்தக்கடன் பிரச்னை ஒன்றாகும்.

யுத்தக் கடன் நிலைமையில் அவநம்பிக்கைக்கு ஏராளமாக விடமிருந்தபோதிலும், அமெரிக்காவின் புதியத் தலைவர் காங்கிரஸ் சபையின் அபிப்பிராயத்தை மாற்றி, எல்லா அமெரிக்க பாங்கர்களும் பொருளாதார நிபுணர்களும் கருதுவது போல் யுத்தக் கடன் தவணைகளை மிகவும் குறைத்தால் அமெரிக்காவுக்கே நலனேற்படுமென்று காங்கிரஸ் கருதுமாறு செய்யலாமென்று நம்பப்படுகிறது.

காப்பு வரிகளாலும் பண உதவியாலும் வியாபாரத்துக்கு விசேஷப் பாதகமேற்பட்டு தேசங்களுள் சரக்குகள் கைமாறுவது கேவலமான ஸ்திதிக்கு வந்துவிட்டதென்று தற்காலம் உணரப்பட்டு வந்திருக்கிறது.

இந்தத் தடைகளைத் தீர்ப்பது பல சிக்கல்களை உண்டாக்குகிறது. இவ் விஷயங்களில் எல்லா தேசங்களும் சீக்கிரமாக ஒன்றுபட்ட அபிப்பிராயத்துக்கு வருமென்று எண்ணுவது அதிக நம்பிக்கை வெளியிடுவது போல் காணலாம். இருந்தபோதிலும் தத்கால நெருக்கடியின் தீவிரத்தால் ஒரு சரியான வழியேற்படலாம்.

* * *

பருத்தி, கரும்புப் பயிர்களின் உற்பத்திச் செலவுபற்றி விசாரிக்கும் பொருட்டு பருத்திக் கமிட்டி, சர்க்கார் விவசாய ஆராய்ச்சி சபை இவைகளின் பிரதிநிதிகள் அடங்கிய ஒரு கூட்டுக் கமிட்டியின் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றதாக தெரிகிறது.

* * *

இந்திய வரிக் கமிஷனர்கள் செய்யும் சிபார்சு, லங்காஷயர் எதிர்பார்ப்பதைப் போல் அவ்வளவு அனுகூலமானதாக இராதென்று மான் செஸ்டர் பருத்தி வியாபாரிகள் அஞ்சுகின்றனரென்று "பினான்ஷியல் டைம்ஸ்" பத்திரிகை கூறுகின்றது. மேற்படி சிபார்சானது லங்காஷருக்கு அனுகூலமானதாக இராமற் போய் விட்டால், அதனால் இந்தியாவில் லங்காஷயரின் வியாபாரம் புனருத்தாரணத்துக்கு ஏற்படும் கேடு, ஜப்பானியப் பெரும் போட்டியால் ஏற்படும் கேட்டையும்விட அதிகமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

* * *

பிரிட்டிஷ் வியாபாரத்தில் குறைவேற்பட்டிருப்பதற்கு விலைவாசிகளின் வீழ்ச்சி காரணமென்றும், இறக்குமதிகள் குறைவு இறக்குமதிவரியின் பலனென்றும், டிஸம்பர் மாதத்தில் இறக்குமதிகள் 60634000 பவுன்சளாகவிருந்து நவம்பர் மாதத்தை விட 10 லக்ஷம் பவுன்களும், சென்ற வருஷத்தைவிட 1 கோடி பவுன்களும் குறைந்திருப்பது குறிப்பிடத்தக்கதென்றும் 'மார்னிங் போஸ்டு' பத்திரிகை கூறுகிறது. டிஸம்பரில் ஏற்றுமதிகள் 32445000 பவுன்களென்றும், நவம்பரில் இத்தொகை 3109500 பவுன்களாக விருந்ததென்றும், 1931 டிஸம்பரில் 32077000 பவுன்களாக விருந்ததென்றும், 1099000 பவுன்கள் வரையில் ஏற்றுமதிகள் அதிகரித்திருப்பதாகவும் பத்திரிகை எடுத்துக்காட்டுகிறது-

* * *

பிரிட்டன் சென்ற சில காலமாக டென்மார்க், நார்வே ஸ்வீடன், ஐஸ்லண்டு இந்நாடுகளின் பிரதிநிதிகளுடன் இறக்குமதித்தீர்வை சம்பந்தமாகப் பேச்சுகள் நடத்திவருகிறது. இவைகள் முடிந்தபின் பால்டிக் பிரதேசங்களுடனும் போலந்துடனும் இத்தகைய பேச்சுகள் துவக்கப்படும்.

லாட்விய சர்க்காரின் பிரதிநிதிகள் பூர்வாங்க விவாதம் நடத்தும் பொருட்டு லண்டனுக்கு வந்து சேர்ந்தனர். பின்லண்டு பிரதிநிதிகள் பிரிட்டிஷ் சர்க்காருடன் இவ்விஷயமாகப் பேச்சு நடத்த ஆவல் தெரிவித்துள்ள மற்ற நாடுகளில், ஆர்ஜன்டைனா, பெல்ஜியம் கொலம்பியா, காஸ்டாரிகா, பிரான்ஸ், ஜெர்மனி, நெதர்லாண்ட்ஸ், பெரு, ஸான்டோ டொமிங்கோ, ஸ்விட்ஸர்லந்து, உருகுவே இவைகளும் சேர்ந்தனவாகும்.

* * *

அதிக வரிகள் விதித்தும் ஜப்பானியச் சரக்குகளின் இறக்குமதி குறையவில்லை. இதனால் பம்பாய் ஆலைக்கைத் தொழிலுக்கு மீண்டும் சங்கடமேற்பட்டிருக்கின்றது. சமீபத்தில் கிடைத்துள்ள ரிப்போர்ட்டுகளிலிருந்து முன்னிலும் அதிகமாக ஜப்பானியத்துணி இறக்குமதி செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதற்கு என்னின் விலை மதிப்பு குறைந்ததே காரணமாகும். இதனால் அதிகத் தீர்வை விதித்ததும் பலனில்லாமல் போகும்படி செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் என்னின் விலை மதிப்பு குறையுமென அஞ்சப்படுகிறது. அம்மாதிரி குறைந்தால் இங்குள்ள நெசவு கைத்தொழில் நிலைமை மிக்க நெருக்கடியாகுமெனக் கருதப்படுகிக்து.

REVIEWS.

The January issue of Commercial India (Calcutta) inaugurating the twelth year is brimming with a number of very interesting articles, prominent among those being Indian Rice Business, Indian Hides and Leather, Readers' Business Problem etc. The issue is a boon to educated middle classes to take advantage to start in business. We draw the attention of our readers to the Prize Announcement that has been made in this issue for narration of the practical side of the small business and the practical chances that make it a success and hope that they will avail the oppurtunity offerd to them. We also congratulate Mr. K. M. Bannerjee the Editor, Commercial India for the bold venture in aid of the unemployed.

தங்கள் வியாபாரத்திற்குள்ள டிரேட் மார்க்குகள், பெயர்கள், லேபில்கள் முதலியவைகளை மற்ற வியாபாரிகள் உபயோகித்து உங்கள் லாபத்தை அடையுமுன் நீங்கள் அவைகளை உடனே

கல்கத்தா ரிஜிஸ்டர் செய்துகொள்ளவும்.

விலாசம்;—ஆல் இந்தியா ரிஜிஸ்ட்ரேஷன் ஏஜென்ஸி,
ஹீபர் ரோட், பாலக்கரை, திருச்சினப்பள்ளி.
முழு விபரம் இனும்.

திரேக ஆரோக்கியத்துக் கேற்ற பழவகைகள்.

பல வெளியூர்களிலிருந்து காலக்கிரமத்துக் கேற்றவாறு குடகு ஆரஞ்சு, ஆப்பிள், வெள்ளை, கருப்பு திராக்ஷைப் பழங்களும், அசல் சிறுமலைப்பழம் முதலிய அனேகவித பழ வர்க்கங்களும், இங்கிலீஷ் காய்கறி வகையறுக்களும், மொத்தமாக தருவித்து வியாபாரிகளுக்கும் இதர பொதுஜனங்களுக்கும், மொத்தமாகவும், சில்லரையாகவும் விலைசாசமாய் விற்க தகுந்த ஏற்பாடு செய்திருக்கிறோம்.

தயவு செய்து எங்களிடம் ஒருமுறை வாங்கி பரீக்ஷித்துப் பார்க்கும்படி விநயமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

விலாசம்:—நா. குப்புசாமி நாயுடு & சன்ஸ்,
பழக் கமிஷன் மண்டி, மார்க்கெட் திருச்சி.

சாமான்களுக்கு ரயில்வே சார்ஜுகள். (RAILWAY RATES)

சாமான்கள்	எங்கிருந்து	எந்த இடத்துக்கு	ரேட்டு மணங்குக்கு		எந்ததேதியிலிருந்து	ஷரா
பாக்கு	அஜிக்கல்	மங்களூர்	3	0	21—12—32	
காஷ்நட்	”	”	2	6	”	
பாக்கு	தலைச்சேரி	”	3	0	”	
விறகு	அரியலூர்	திருச்சிராப்பள்ளி	2	4	5—1—33	
”	புதுக்கோட்டை	”	1	7	”	
”	”	ஸ்ரீரங்கம்	1	10	”	
”	திருச்செந்தூர்	பாளயங்கோட்டை	1	6	20—1—33	
கருவாடு	மங்களூர்	எர்ணாகுளம்	3	2	21—12—32	O. R; L; S/12
”	”	திரூர்	2	10	”	W/300;
”	”	எர்ணாகுளம்	2	10	”	O. R; L; S/6.
”	”	திரூர்	2	6	”	
நெல்	கொல்லங்கோடு	கோயம்புத்தூர்	2	3	10—1—33	
”	”	பொள்ளாச்சி	1	0	”	
”	புதுநகரம்	ஆனைமலைரோடு	1	0	”	
”	”	கோயம்புத்தூர்	2	0	”	
”	”	பொள்ளாச்சி	1	3	”	
ஓடுகள்	கல்லாயி	மேட்டுபாளையம்	2	9	23—12—32	
அடுப்புகரி	கொள்ளிடம்	மதுரை	6	7	15—2—33	இந்த தேதியிலிருந்து இந்த ரேட்டுகள் ரத்து செய்யப்படும்.
”	மரவக்காடு	”	6	9	”	
”	முத்துப்பேட்டை	”	6	7	”	
”	ராமநாதபுரம்	”	3	2	”	
”	தோப்புதுறை	”	6	9	”	
”	தூத்துக்குடி	”	3	11	”	

ரயில்வே பகுதி.

(Railway Matters.)

ஒரு வியாபாரி நாகபுரியிலிருந்து கல்கத்தாவுக்கு பச்சைப்பாக்கு அனுப்பினார். அதன் எடை 23 மணங்கு. பணத்தைக் கட்டி வாங்கும்படி ரசீதுபோட்டு அனுப்பிவைத்தார். ஆனால் பாக்கு வந்து சேர்ந்தவுடன் சாமானை வாங்கிக்கொள்ளுவதற்கு முன் எடைபோட வேண்டுமென்று கேட்டதற்கு ரயில்வே அதிகாரிகள் மறுத்துவிட்டார்கள். அதன் மேல் வியாபாரியும் சாமானை எடுக்க மறுத்துவிட்டார். ஒரு மாதம் வரையில் சாமான் எடுக்கவில்லை. கடைசியாக எடைபோட்டபொழுது 15மணங்கு 10 சேர்தானிருந்தது. இதன் மத்தியில் சாமான் கெட்டுப்போய்விட்டது. வர்த்தகர் நஷ்டத்திற்கு பிராது போட்டார். ரயில்வேசிப்பந்திகள் எடைபோட மறுத்தது தவறென்றும் அவர்கள் கட்டாயம் எடை போடச்சொன்னால் போடவேண்டியதென்றும் சொல்லி ஜட்ஜ் நஷ்டஈடு, கேட்டுக்கொண்டமாதிரி, கொடுக்க தீர்ப்பு செய்தார்.

* * *

தென் தேசத்தில் பழ வியாபாரம் செய்யும் வர்த்தகர்கள் தங்களுடையபழங்களை அழுகிப்போகாமல் அனுப்புவதற்கு போதுமான சௌகரியங்கள் தென்னிந்தியா ரயில்வே கம்பெனியார் செய்து கொடுக்காமலிருக்கின்றார்களென்றும், வடமேற்கு ரயில்வேயில் பழங்கள் அழுகிப் போகாமலிருக்கும்படியாக வண்டிகள் கட்டப்பட்டு அதன் மூலமாக பஞ்சாப் தேசத்திலிருக்கும் பழவியாபாரிகள் பழங்களை அழுகிப் போகாமல் அனுப்பி வருகிறார்களென்றும், பழவியாபாரம் செய்யும் வர்த்தகர்கள் தங்களுடைய வியாபாரத்திற்கு மிகவும் இடையூறு ஏற்படுகிறதென்றும் தெரிவித்துக் கொள்கின்றபடியால் தென்னிந்திய ரயில்வே கம்பெனியார்(Refrigerator wagons) குளிர்ச்சியுள்ள வாகன்களை கட்டி வர்த்தகர்களுக்கு வேண்டிய சௌகர்யங்கள் செய்து கொடுப்பார்களென்று எதிர் பார்க்கப்படுகிறது.

* * *

ஜனவரி௴ நடைபெற்ற சென்னை சட்டசபை கூட்டத்தில் நெல் விற்பனையாகிறதற்கு ரயில்வே கட்டணம் குறைப்பதைப்பற்றி ரயில்வே அதிகாரிகளுக்கு எழுதும் விஷயத்தை யோசிப்பதாகவும் கனம் மந்திரிஅவர்கள் சொல்லியிருக்கின்றார்.

* * *

கடப்பை வியாபாரி திரு பாலாஜி பூர்மல் என்பவர் நெல்லூர் டிஸ்டிரிகட் முன்சீப் கோர்ட்டில் எம். எஸ். எம். ரயில்வேயிலிருந்து ரூ. 353—13—0 அதிகமாக வசூல் செய்ததை திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று பிராது செய்திருந்த விபரம் “வர்த்தக ஊழியன்” ஜனவரிமாத சஞ்சிகையில் வெளியிட்டிருக்கிறது. டிஸ்டிரிகட் முன்சீப் விசாரணை செய்து கேசை ஜனவரி மாதம் 20 தேதி தள்ளிவிட்டார். எம்.எஸ்.எம். ரயில்வே கம்பெனியார் எதிர்வாதம் செய்கையில் ரேட்டுகளில் வித்தியாசமிருந்தால் சாமான் எடுக்கையில்நிறுத்து வசூல் செய்ய விதிகளிருக்கிறதென்றும், ஸ்டேஷனில் கூட்ஸ் கிளர்க்கை ரேட்டுகளைச் சொல்லும்படி ரயில்வே அதிகாரிகள் அவருக்கு உத்திரவுகொடுக்கவில்லையென்றும், கூட்ஸ் கிளர்க்கு சொன்னவைகளை, யெல்லாம் கம்பெனியை கட்டுப் படுத்தாதென்றும் எடுத்துசொன்னார்கள்.

T.R. ரெங்கசாமிநாயுடு

வர்ணம் & கண்ணாடி வியாபாரம்,

341, 42, பெரியகடைவீதி, திருச்சினாப்பள்ளி.

எம்மிடம் பிரசித்திபெற்ற கம்பெனிகளின் நேர்த்தியான வார்னீஷ், வர்ணங்கள், முகம் பார்க்கும் நிலைக்கண்ணாடிகள், ஜன்னல் கண்ணாடிகள், கலர் கண்ணாடிகள்.

ராஜா ரவிவர்மாவின் அழகிய சித்திரப்படங்கள், ஜெர்மன் & இங்கிலீஷ் லேடி & சீனரி படங்கள், போஸ்டு கார்டு படங்கள், படங்களுக்கு வேண்டிய சட்டம் கண்ணாடிகள் கால் அங்குலம் வெளிச்ச கண்ணாடிகள் அட்டை, டின் பிளேட் வகைகள்.

திருவிழாக்களுக்கு வேண்டிய கலர் காகிதங்கள், வர்த்தி தகடுகள், கண்ணாடி மணி தினுசுகள், அசல் தங்கம் & வெள்ளி ரேக்குகள் முதலியவைகள் விலை சரசமாயும் நயமானதாயும் கிடைக்கும்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.

N. B. வெளியூர் ஆர்டர்களுடன் அட்வான்ஸ் முன் பணம் அனுப்புதல் வேண்டும்.

சி. சோமு பிள்ளை,

இரும்பு வியாபாரம்,

மயிலஞ்சந்தை, திருச்சினாப்பள்ளி.

எங்களிடம் கைதேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு தயார் செய்த உயர்ந்த பூட்டு தினுசுகளும், பம்பு (pipe) குழாய் பிட்டிங் சாமான்கள் பூராவும் குளவு நாகத்தகடுகளும், உயர்ந்த மார்க்கு சிமிட்டு மூட்டைகளாகவும், பீப்பாய்களாகவும், கட்டிடங்களுக்கு உபயோகப்படும்படியான கர்டர்களும், சகலவிதமான வர்ணம், வார்னீஷ் தினுசுகளும் வெகு சரசமாயும் நயமாயும் கிடைக்கும்.

சகலவித ஸ்டேஷனரி சாமான்களும் தெப்பகுளம் சமீபத்திலிருக்கும் எமது ஷாப்பு கடையில் நயமாய் கிடைக்கும்.

இந்தியத் தங்கமெங்கே?

லண்டன் நாணய உற்பத்திசாலையின் உபத்தலைவரான சர். ராபர்ட் ஜான்சன் வெளியிட்டிருக்கும் வருடாந்தர யாதாஸ்தில் "பவுன் ஸ்டெர்லிங், பிரெஞ்சு பிராங்குடனும் அமெரிக்க டாலருடனும் திண்டாடிக் கொண்டிருக்கும்பொழுது" ஸ்டெர்லிங்கிற்குத் தீவிர பக்கபலமாக நின்றுதவியது, இந்தியாவிலிருந்து ஏராளமாக எற்றுமதியாகிய தங்கமென்பதாகக் குறிப்பிடுகின்றார்.

1931-ம் வருஷம் செப்டம்பர் 21-ல் இங்கிலாந்து தங்க நிர்ணயத்தை ரத்து செய்தவுடன், இந்தியாவிலிருந்து தங்கம் எற்றுமதியாக ஆரம்பித்துவிட்டது. அவ்வருஷக் கடைசிக்குள்ளாக 25,000,000 பவுன் பொறுமான தங்கம் இறக்குமதியானதாகவும் ஆகஸ்ட் மாதத்திற்குள்ளாக 61,000,000 பவுன் தங்கம் இறக்குமதி செய்யப்பட்டதாகவும், சர். ராபர்ட் குறிப்பிடுகின்றார். அதற்கப்பாலும் தங்க இறக்குமதி அதிகரித்தது. சென்ற நவம்பர்மாதக் கடைசிக்குள்ளாக சுமார் 74,000,000 பவுன் பொறுமான தங்கம் இந்தியாவிலிருந்து எற்றுமதியாகி விட்டது.

தங்கக் கிடங்கு.

அநேக வருடங்களாகப் பிரிட்டிஷ் இந்தியா தங்கக் குவியல்களுக்கு இருப்பிடமாகக் கருதப்பட்டுவந்தது. 1873-ம் வருடத்திற்கும் 1931ம் வருடத்திற்கும் இடையில் மாத்திரம் இந்தியாவில் 500,000,000 பவுன் முதல் 600,000,000 பவுன் வரை தங்கம் சேகரமாயிருக்குமென்பதாக மதிப்பிடப்பட்டிருந்தது. தங்கம் இப்பொழுது நாட்டை விட்டு வெளியேறவேண்டியதின் முக்யதத்துவமும், இது காரணமாக இந்தியா பிரயோஜனமில்லாமல் நாணயங்களைச் சேகரிப்பது குறைந்துவிட்டதும் எவருக்கும் உற்சாகத்தை யளிக்குமென்பதில் தடையில்லை.

வருடந்தோறும் சராசரி 80,000,000 பவுன் தங்கம் உற்பத்தி செய்யப்படுகின்றது. சென்ற 1931 செப்டம்பர் முதல் இந்தியா எற்றுமதி செய்திருக்கும் தங்கமும் இதே அளவுள்ள தென்பது குறிப்பிடத்தக்கது. அன்றியும், இந்தியாவில் பெரும்பாலோர் தங்கத்தை நகைகளாகச் செய்துவைத்திருக்கின்றனர். தங்க எற்றுமதி இவர்களை அதிகமாகப் பாதிக்கவில்லை.

„இந்தியப் பெண்கள் இன்னும் காப்புகள் மீதும் வளையல்கள் மீதும விருப்பமுடையவர்களா யிருக்கின்றனர். சுதேசி நகைகளைத் தங்கக் கட்டியாக உருக்கி விடுவார்களென்பதற்குறிய அறிகுறியுமில்லை"

இங்கிலாந்தில் கிடைத்ததெவ்வளவு

சென்ற செப்டம்பர் மாதக் கடைசியில் சர் ராபர்ட் தமது யாதாஸ்தில் கையொப்பமிட்டார். அம்மாதமுடிய இந்தியாவிலிருந்து பிரிட்டனில் இறக்குமதியான தங்க மதிப்பு 74,000,000 பவுன். அதே காலத்தில் இங்கிலாந்திலிருந்து கிடைத்த தங்கத்தின் மதிப்பு 7,000,000 பவுனே யாகும். இத்தொகை நகையை உருக்கியதிலிருந்தும் நாணயங்களைக் கொடுத்ததிலிருந்தும் சேர்ந்ததாகும். இங்கிலாந்தில் தங்கத்தைச் சர்க்காருக்குக் கொடுத்துவிட வேண்டுமென்ற எண்ணம் வெகு தீவிரமாய்ப் பரவி யிருந்தபடியால் இப்பொழுது பிரிட்டிஷ் ஜனங்கள் கைவசம் சொற்ப தங்க நாணயங்களே யிருக்குமென்பதாக, சர். ராபர்ட் அபிப்பிராயப்படுகின்றார். எது எவ்வாராயினும் இந்தியாவின் தங்க எற்றுமதியின் விசேஷம் இன்னதென்பது சொல்லாமலே விளங்கும்.

தங்க நாணயச் செலாவணி.

இன்னும் தங்க நாணயங்கள் பிரிட்டனில் ஊடாடுகின்றன. இது அயல்நாடுகளிலிருந்து பிரிட்டனுக்கு விஜயஞ்செய்கின்றவர்கள் கொண்டு செல்வதாகும். விசேஷமாக தென்னாப்பிரிக்காவிலிருந்து செல்லும் கனவான்களே தங்க நாணயங்களை அதிகமாக உபயோகிக்கின்றனர். தென்னாப்பிரிக்காவில் தங்கம் தாராளமாகச் செலாவணியாகின்றது. (ஆனால் இப்பொழுது தங்க நாணயத்தை ரத்துசெய்து தங்கக் கட்டுப்பாடு செய்திருப்பது நேயர்களறிந்த விஷயம்.)

நாணய உற்பத்திச்சாலை.

வர்த்தகத் தளர்வும் பொருளாதார நெருக்கடியும் சர்க்கார் நாணய உற்பத்திச்சாலையைப் பாதிக்காமல் விடவில்லை. 1931-ம் வருடத்தில் நாணய உற்பத்தி மிகக் குறைந்துவிட்டது. 1930-ம் வருஷம் 185,000,000 நாணயங்களையும், 1931-ம் வருஷம் 156,000,000 நாணயங்களையும் நாணயசாலை உற்பத்தி செய்திருக்கின்றது. அயல்நாட்டு அல்லது குடியேற்ற நாட்டு நாணய உற்பத்தியே பெருவாரியாகக் குறைந்து விட்டது. 1930-ம் வருஷம் குடியேற்ற நாடுகளுக்காக 111,000,000 நாணயங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. ஆனால் 1931ல்- தொகை 65.000,000 ஆகக் குறைந்துவிட்டது. இதில் 41,300 000 நாணயங்கள் அந்நிய நாடுகளுக்கு ரூமேனியாவுக்கு 21,750,000 லத்வியாவுற்கு 2,250,000 இராக்குக்கு 17,350,000, உற்பத்தி செய்யப்பட்டன.

இவ்வருஷத்தில் அல்பேனியா, ஜூகஸ்லேவியா, ரூமேனியா, லட்வியா, கௌட்டமலா முதலிய நாடுகளிலிருந்து நாணய உற்பத்திசெய்வதற்கு ஆர்டர்கள் கிடைத்திருக்கின்றன.

சமீப நஷ்டங்கள்.

1932-ம் வருஷத்திலிருந்து கவனித்தால் இரு வருஷங்களாகவே நாணயச்சாலைக்கு லாபமேற்பட்டிருக்கின்றது. 1928,29 ஆகிய இவ்விரு வருஷங்களிலேமட்டும் லாபங்கிடைத்திருக்கின்றது.

நாணயச்சாலை 1872-ம்வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. அன்று முதல் இதுவரை 36,439,253 பவுன்மொத்தலாபம் கிடைத்திருக்கின்றது. நஷ்டம் 1,940,726 ஆகவே நாணயச் சாலைக்கு இதுவரை 34,498,527 பவுன் லாபமேற்பட்டிருக்கின்றது.

தென்னாப்பிரிக்காவில் சமீப காலம் வரை தங்க நிர்ணயத்தை ரத்து செய்யாமலிருந்தது, அத்தேசத்திலும் அதை யடுத்துள்ள நாடுகளிலும் செலாவணியின் கஷ்டங்களை விளைவித்துவிட்டது. பிரிட்டிஷ்வெள்ளிநாணயங்களும், தென்னாப்பிரிக்கா சர்க்கார் வெள்ளிநாணயங்களும் எல்லைப்புறத்திற்கு வெளியே கொண்டு செல்லப்படுகின்றது. ஏனெனில் அங்கு வெள்ளிக்கு அதிக தங்க மதிப்பிருக்கின்றது.

ரோடீஷியாவின் சங்கடம்

இது சம்பந்தமாக சர் ராபர்ட் கூறுவதாவது:—இது தென்னாப்பிரிக்க சர்க்காருக்கு வெகு வசதிக் குறைவை யுண்டு பண்ணுவதுடன், தென்ரொடீஷியாவில் நாணயஙகளே இல்லாமற் செய்துவிட்டன. இம்மாதிரியான சங்கடங்கள் இனிமேல் எற்படாமலிருப்பதன் பொருட்டு ரொடீஷியா சர்க்கார் விசேஷ உபநாணயத்தை எற்படுத்த வேண்டியதா யிருக்கின்றது. இந்தநாணயங்கள் லண்டனில் உற்பத்திசெய்யப்படும்.

SILVER WARE OF DISTINCTION

விளம்பரம்.

நயமான வெள்ளி பாத்திரங்கள்.

நாகரிகமான வேலைகள்! நாணயமான இடம்!!

சகோதர சகோதரிகளே!

நீங்கள் கல்யாணம் முதலிய வைபவங்களுக்கு நம்பிக்கையுடனும் உத்திரவாதத்துடனும் வாங்க விரும்பும் வெள்ளிப் பாத்திர சாமான்களுக்கு எனது புதிய கடைக்கு ஒருமுறை விஜயம்செய்து பாருங்கள்.

உயர்ந்த வேலைக்காரர்களைக்கொண்டு தயாரிக்கப்பட்ட அநேக ரகங்கள் கைவசமிருக்கின்றன.

அசல் 1 நெம்பர் வெள்ளி சாமான்கள் என்பதற்கு கியாரண்டி கொடுக்கிறேன்.

சகாய விலையுடன் வேலைப்பாடமைந்த சாமான்கள் என்னிடம் கிடைக்கும்

அவசியம் தாங்கள் தங்கள் நண்பர்களோடு எனது கடைக்கு வந்து தங்களுக்கு வேண்டிய சாமான்களை வாங்க வேண்டிக்கொள்ளுகிறேன்

கோ. ராதாகிருஷ்ண செட்டி,
தங்கம் வெள்ளி பாத்திர வியாபாரம்,
(கன்னிகா பரமேஸ்வரி அம்மன் கோயில் அருகில்)
பெரியகடைவீதி திருச்சினாப்பள்ளி.

வர்த்தகர்களுக்கு கவர்னர் உபதேசம்.

சென்ற மாதம் கல்கத்தாவில் ஐரோப்பிய வர்த்தகச் சங்கங்களின் ஐக்கிய சபைக் கூட்டத்தின் நடவடிக்கைகளை ஆரம்பித்து வைக்குமாறு அச்சபைத் தலைவரான ஸர் பெந்தால் வங்கக் கவர்னரைக் கேட்டுக்கொள்ளுகையில், பேசியதின் சாரம் பின்வருமாறு:—

வியாபார விஷயத்தில் வித்தியாசம் காட்டுவது சம்பந்தமாக இன்னும்இறுதியானமுடிவுசெய்யப்படவில்லையாயினும் இந்நாட்டிலுள்ள ஐரோப்பிய வியாபாரிகள் சமூகத்திற்கு நீதிகிடைக்கும்முறையில் பிரிட்டிஷ் சர்க்காரும் இந்திய சர்க்காரும் இந்தியர்களில் ஏராளமானவர்களும் நடந்து கொள்வரென நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்தியாவின் செல்வ மதிப்பைக் குறித்துப் பேசுகையில், ரிசர்வ் பாங்கி சீக்கிரத்தில் ஏற்படுத்தப்படுவதை ஐக்கிய சபை ஆதரிப்பதாகத் தெரிவித்தார்.

கவர்னர் பேச்சு.

கவர்னர் திறந்து வைக்கையில், "ஐக்கிய அரசியல் முறையில் சேரும் ஒவ்வொரு பிரதேசத்தினுடையவும் அரசியல்-பொருளாதார முன்னேற்றம் சீரிய முறையில் ஏற்படுத்துவதற்குத் தக்க முறையில், முக்கியமாக மாகாணங்கள் சம்பந்தப்பட்ட பிரச்னைகளுக்கு, புதிய அரசியல் முறையில் போதுமானபடி ஏற்பாடு செய்யப்பட்டாலன்றி அவ்வரசியல்முறை வெற்றியுடன் நடந்தேறுமென எதிர்பார்க்க முடியாது" என அறிவித்தார்.

கவர்னர் மேலும் பேசுகையில், வர்த்தகச் சங்கங்களின் பிரதிநிதிகள் முன் இருந்துவரும் பல கடுமையான பிரச்னைகளை தாம் அறிந்திருப்பதாகவும், அப்பிரச்னைகளிலுள்ள சிக்கல்கள் இந்தியாவில் மட்டுமின்றி உலகமுழுவதிலுமுள்ள ராஜீய ஸ்திரமின்மை காரணமாக அதிகப்பட்டிருக்கின்றனவென்றும் கூறினர்.

பின்னர் அவர் ராஜீய நிலையில் ஏற்பட்டிருக்கும் அபார அபிவிருத்தியைப் பற்றிக் குறிப்பிட்டு, வியாபார உலகில், சென்ற சில காலமாக கட்டுப்பாடான முறையில் தலையிடப்பட்டு வர்த்தகற்குப் பின்னர், கூடிய வரை பழைய நிலை ஏற்பட்டிருக்கின்றன வென்றும், இதற்கு பொருளாதார நோக்கங்களைப்போல் அரசியல் நோக்கங்களும் காரணங்களாகுமென்றும் கூறினர்.

தற்பொழுது மிகக் குறைந்த வட்டிக்குக் கிடைக்கும் ஏராளமான பணம், ஸ்திரமான நிலை ஏற்பட்டதன் பேரில், வியாபார கைத்தொழில் முன்னேற்றத்திற்கு உதவியாயிருக்குமென தாம் எண்ணுவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஒட்டவா ஒப்பந்தத்தைப்பற்றி கவர்னர் பேசுகையில் சாம்ராஜ்யத்தின் மற்ற பாகங்களுடன், தானாக முன்வந்து, பொருளாதார ஒப்பந்தம்செய்துகொள்ள இந்தியா முடிவு செய்திருப்பது மிக்க விசேஷம் பொருந்தியதாகுமெனக் கூறினர்.

அரசியல் பிரச்னையைக் குறித்து கவர்னர் பேசியதாவது:—

"இப்பிரச்னை வர்த்தக சமூகத்தின் மனத்தில் நியாயமாக மிக்க இடம்பெறுதல் வேண்டும். அரசியலையும், வர்த்தகத்தையும் கூடியவரை ஒன்று சேர்க்காமலிருத்தல் நலமென்ற பழைய கொள்கை இப்பொழுது அடியோடுமாற்றப்பட வேண்டும். ஏனெனில் நவீன ராஜாங்க வேலைகளில் சர்க்கார் வரவர அதிகமாக வர்த்தகத்தின் வளர்ச்சியையே தங்களுக்குக் காதாரமாகக் கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே வர்த்தகத்திற்கும் கைத்தொழில்களுக்கும் பிரதிநிதிகளாக உள்ளோர் அரசியல் முறையின் நடப்பில் திட்டமான பங்கெடுத்துக்கொள்ள வேண்டும். வியாபார விஷயத்தில் சமத்துவமான வேலை முறை அனுஷ்டிக்கப்படுவது பற்றியும், இந்தியாவைப்பற்றிய சர்வதேசிய மதிப்பைப் பாதுகாப்பதுபற்றியும் அரசியல் முறையில் திட்டமான பிரிவுகள்சேர்க்கப்பட வேண்டுமென வர்த்தகர்கள் தங்கள் நலத்தை முன்னிட்டு வற்புறுத்த வேண்டும். இம்மதிப்பையே சர்க்கார் நலமும், வர்த்தகர்கள் நலமும், இதன் மூலம் ஜனங்கள்நலமும் பொறுத்திருக்கின்றன. வர்த்தக சமூகம் சட்டசபைகளில் அதிகமான சிரத்தையெடுத்துக்கொள்ளுமென நான் நம்புகிறேன். அதன் மூலம் அச்சமூகத்தின் பிரதிநிதிகள் அச்சபைகளில் மதிப்புடன் தங்கள் கருத்துகளை வற்புறுத்தக்கூடும்.

ஐரோப்பியர், ஆங்கிலோ இந்தியர் இந்தியர்களிடை மட்டுமின்றி, முக்கியமாக வங்காளத்திலுள்ள நடுத்தர இந்தியரிடையும் மிக்கக்கடுமையான முறையில் வேலையில்லாத் திண்டாட்டமிருந்துவருகிறது. இத்திண்டாட்டத்திற்குக் காரணம் கல்வி முறையேயாகும். இக்கல்வி முறையின் உபயோகத்தன்மை வெகு நாட்களுக்கு முன்னமேமறைந்துவிட்டது. வர்த்தகங்கள் என்ற முறையில் நீங்கள் உங்கள் அனுபவத்தை இம் முக்கியமான பிரச்னையைத் தீர்ப்பதில் ஈடுபடுத்த வேண்டும். இப்பிரச்னை தீர்க்கப்படுவதால் இந்தியாவின் தற்போதைய துன்பங்களில் சிலவற்றிற்காவது பரிகாரமேற்படக்கூடும். இப்பிரச்னையைத் தீர்ப்பதில் வர்த்தக சமூகத்தின் திறமையும், அனுபவமும் மிக்கஉதவியாயிருக்கும்.

தீர்மானங்கள்.

முதல் தீர்மானத்தை பம்பாய் சங்கத்தைச் சேர்ந்த திரு ஜி. எல். விண்டர் பாதம் பிரேரித்தார். அதன் சாரம் வருமாறு:—

"குறைவான பரிவர்த்தனை விகிதம், அல்லது உதவிப் பணம் அல்லது செயற்கை முறையாலேற்படும் வேறு சந்தர்ப்பங்கள் இவைகள் காரணமாக இந்தியாவில், உள்நாட்டுத் தொழில்களுக்குத் தீங்கு விளையத்தக்க முறையில் குறைந்த விலைக்கு விற்கப்படும் வெளிநாட்டுச் சரக்குகளினின்றும் உள்நாட்டுத்தொழில்களை பாதுகாக்கும்பொருட்டு அவசியமான சமயங்களில், சட்டசபைகளின் அங்கீகாரத்தின் பேரில், தாமதமின்றி உடனே நடவடிக்கை எடுத்துக்கொள்ள இந்திய சர்க்காருக்கு அதிகாரமளிக்கும்பொருட்டு சீக்கிரத்தில் ஒரு மசோதா கொண்டுவரப்பட வேண்டும்."

ஸர் ஜார்ஜ் ஷுஸ்டர் விவாதத்துக்கு பதிலளிக்கையில் ஜப்பான் தற்பொழுது கையாள்வது போன்ற வேலை முறையை அதிககாலம் கையாண்டுவரக் கூடுமென்பது ஏற்றுக்கொள்ளத் தக்கதல்ல வாதலின் ஒரு தற்காலிக நிலையை முன்னிட்டு இத்தகைய ஒரு மசோதா கொண்டுவருவது நியாயமென தாம் எண்ணவில்லை யெனக் கூறினர்.

அடுத்த தீர்மானம் பர்மா சங்கத்தைச் சேர்ந்த திரு பி. பி. கிரிஸ்டால் என்பவரால் பிரேரிக்கப்பட்டது. சமீபத்தில் மாட்ரிடில் நடந்த தந்தி மகாநாட்டில் தெரிவிக்கப்பட்டதுபோல் தந்திகளில் உபயோகிக்கப்படும் வெளிப்படையான பாஷைசம்பந்தமாகவோ, ரகசியபாஷை சம்பந்தமாகவோ உள்ள விதிகளில் எத்தகைய மாறுதலும் செய்யப்படக்கூடாதென்றும், அங்ஙனம்செய்வதால் தந்திப் போக்குவரத்துக்கான செலவு அதிகமாகும் அல்லது தற்பொழுது தந்திகளில்

(இதன் தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

BRILLIANT RANGOON KAMALAM.

Can be had in retail also at moderate prices.

Our Brilliant Rangoon Kamalam polished with diamond dust, manufactured in our Diamond Cutting Factory, under the



Expert supervision of highly qualified and well experienced hands, in electric current machines.

A trial is solicited.

From :— **T. B. Govindararajaloo Naidu,**

Burma Chemical Works & Jeweller, 142, Mogul Street, RANGOON.

எனது புதிய தொழிற்சாலையில், கைதேர்ந்த தொழிலாளர்களைக்கொண்டு எனது மேற்பார்வையில் தயார் செய்யப்படும் ரெங்கூன் கமலங்கள் எலக்டிரிக் சக்கர சாணையில் வைர வடியைக்கொண்டு மெருகு தீட்டி அசல் வைரங்களுக்கு ஒப்பான பிரகாச பூரிப்புடன், சுத்தமாக பட்டை தீர்த்து குறைந்த விலைக்கு இந்தியாவில் எல்லா பாகங்களுக்கும் ஏராளமாக அனுப்பப்பட்டு வருகின்றன.

எனது வர்த்தகம் எல்லா ஊர்களிலும் விருத்தியாகி, வியாபாரிகள் தக்க லாபம் அடையும்பொருட்டு, எங்கள் ஊர் நிலவரத்திற்கு சரசமாய் சரக்குகள் மொத்தமாயும் சில்லரையாகவும் அனுப்பி வருகின்றேன்.

ஷை ரெங்கூன் கமலங்களில், பவுனினால் கட்டப்பட்ட பலவித நகைகளும், இமிட்டேஷன், பட்டை சிகப்பு, குச்சை சிகப்பு, பிளேயின் பட்டை, நீலம் திரிகலர், பச்சை, தளுக்கு படிக்கம், படிக்கம், முதலிய கற்களும், தங்கம், வெள்ளி வர்ணத்தகடுகளும், கைவசம் தயாராய் இருக்கின்றன.

தாங்கள் இதுவரையில் எங்களூர் வியாபாரிகளிடம், ஏராளமான சரக்குகள் தருவித்திருந்த போதிலும், ஒரு தடவை ஸ்பெஷலாக எனது ரெங்கூன் கமலங்களுக்கும், நகைகளுக்கும் ஒருமுறை ஆர்டர் கொடுத்து வரவழைத்துப் பார்த்தால் எனது சரக்குகளின் உயர்வும், விலை சகாயமும் நன்கு தெரியும்.

தங்கள் தேவைக்கு இன்றே ஆர்டர் எழுதுங்கள்.

T. B. கோவிந்தரராஜலு நாயுடு,
பர்மா கெமிகல் ஒர்க்ஸ் & நகை வியாபாரம்,
142, மொகல் ரோடு, ரேங்கூன்.

(10-பக்கத் தொடர்ச்சி.)

உபயோகிக்கப்படும் இரகசிய பாஷை பாதிக்கப்படும் என்றும் அத்தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தது.

இன்னும் சிலவற்றில் ரயில்வேக்கள் சம்பந்தமாக சட்ட பூர்வமான ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்த வேண்டுமென்றும், மோட்டார் வண்டிகள் மீது விதிக்கப்படும் இறக்குமதி வரிகளைக் குறைக்க வேண்டுமென்றும், ராஜாங்க நிலக்கரிச் சுரங்கங்களுக்காக மேலும் புதிய ரயில் பாதை அமைக்கப்பணம் அனுமதிக்கா திருக்குமாறு சர்க்காரைக் கேட்டுக் கொள்வதாகவும் கூறப்பட்டிருந்தது.

வரிச்சுமை.

ஸர். இ. ஸி. பெந்தால் கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பிரேரித்தார்:—

"இந்நாட்டில் வர்த்தகம், கைத்தொழில் இவைகள்மீது இருந்து வரும் வெகுக் கடுமையான வரிச் சுமையை இச்சபை இந்திய சர்க்காருக்கு எடுத்துக் காட்டி, செல்வ நிலையில் ஏற்படும் அபிவிருத்தி எதுவும் இவ்வரிச் சுமையைக் குறைக்க உபயோகிக்கப்பட வேண்டுமென்ற தனது கருத்தைப் பதிவு செய்கிறது."

இத்தீர்மானத்தைப் பிரேரித்து ஸர். பெந்தால் பேசியதாவது:—

"சணல், சாக்கு இவைகளுக்கு விதிக்கப்பட்டு வரும் ஏற்றுமதி வரி காரணமாக வங்காளத்திலுள்ள எங்களுக்கு மற்றவர்களுக்கில்லாத ஒரு தனி இடையூறு ஏற்பட்டிருக்கிறது. தற்பொழுது அவ்வரி விதிக்கப்படுவது பொதுவாக இந்தியாவின் நலத்திற்காகவேயன்றி, வங்காளத்தின் நலத்திற்காகவன்று. ஆரம்பத்தில் அது தற்காலிக உபயோகத்துக்காக யுத்த வரியாக விதிக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்காலிக உபயோகம் என்பதுபற்றி நாம் கொண்டுள்ள கருத்தையல்லாது இந்திய சர்க்கார் வேறு கருத்து கொண்டிருக்கின்றனர். செழிப்புள்ள நிலை இருந்து வருகையில் இவ்வரிச் சுமையின் கஷ்டம் அவ்வளவாகப் பாராட்டப்படவில்லை. ஆனால் மற்ற தொழில்களுடன் இத்தொழிலுக்கும் ஏற்பட்டிருக்கும் வெகுக் கேவலமான நிலையில், இத்தொழில் பிழைத்திருக்கவேண்டுமாயின், அது மேலும் இவ்வரிச்சுமையைச் சுமந்து வரமுடியாது.

தாரதம்மியமான முறையில் பாதுகாப்பளிப்பதன் மூலம் இந்தியத் தொழில்களுக்குப் பாதகமேற்படாது செய்யும் இநாட்டு வேலை முறையை ஆதரிப்பதே இச்சபையின் வேலை முறையாகும். ஆனால் உலக வியாபாரத்துனுடையவும், உட்கொள்வோருடையவும் நலத்தை முன்னிட்டு இறக்குமதி வரிகளைக்கூடிய வரையில் குறைக்கவேண்டுமென நாங்கள் விரும்புகிறோம். முக்கியமாக கைத்தொழில் பொருள்களை உபயோகிப்போர் நலத்தைமுன்னிட்டு அவ்வரிகள் குறைக்கப்படவேண்டும். வர்த்தகம், கைத்தொழில் இவைகளின் வரிச்சுமை மிக்க அதிகமாகிவிட்டது. தற்பொழுதுள்ள மந்த நிலையில் அனைவருக்குமே கஷ்டமேற்பட்டுளது. சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் சம்பளங்கள் குறைக்கப்பட்டது பற்றி அவர்கள் மீது நாமனைவரும் மிக்க அனுதாபம் கொண்டுள்ளோம். ஆனால் இவர்களுடைய சம்பளக் குறைவு ஒரு கட்டுக்குட்பட்டதாகவும், வருமான வரிச்சுமையில் காட்டப்படும் சலுகையால் மட்டுப் பட்டதாகவும் இருக்கையில் வர்த்தகர்கள், கைத்தொழில் முதலாளிகள் இவர்களது வருமானம் 100-க்கு 100-வரை குறைந்து போய்விட்டது. நாம் புகார் செய்யாததால் நமது நிலையில் நாம் திருப்தி கொண்டிருந்ததாகக் கருதப்பட்டதென எதிர்காலத்தில் சொல்லப்படக் கூடாதென்பதற்காக நாம் இப்பொழுதே நமது எதிர்ப்பை வெளியிடுகின்றோம். இவ்வரிச் சுமையைப் பரிகரிக்க வேண்டியகாலம் வந்துவிட்டது. அங்ஙனம் செய்யப்படவில்லையேல் வர்த்தகமும், கைத்தொழிலும் சுவாசிக்க இடமின்றி மாண்டுபோய் விடும்.

பம்பாய்ச் சங்கத்தைச் சேர்ந்த திரு. ஜி. எல். விண்டர்பாதம் தீர்மானத்தை ஆதரிக்கையில் பின்வருமாறு கூறினார்:-

"இவ்விஷயத்தின் பால் சென்ற சில காலமாகவே பொது ஜனங்களும், பத்திரிகைக்காரர்களும் தங்கள் கவனத்தை ஈடுபடுத்தி வந்திருக்கின்றனர். மிஞ்சும் பணமெதையும் வரி செலுத்துவோர் மீதுள்ள சுமையைக் குறைக்க அதில் பாதிப்பணத்தைக்கூட உபயோகிக்காது தங்கள் உத்தியோகஸ்தர்களின் நலத்திற்காக உபயோகிப்பது பற்றி சர்க்கார் உண்மையில் ஆலோசித்து வருகின்றனரென்பது எளிதில் நம்பக்கூடாததாயிருக்கிறது. செல்வநிலையில் அபிவிருத்தி ஏற்படுமேல் அவ்வபிவிருத்திக்கு வரி செலுத்துவோர் அதிகவரி செலுத்துவதே காரணமாகுமென நான் எடுத்துக் காட்டுகிறேன். வருமானவரி உபரிவரி சம்பந்தப்பட்டவரை, சர்க்கார் உத்தியோகஸ்தர்கள், செல்வ நிலையில் அபிவிருத்தி ஏற்பட எவ்வகையிலும் உதவி புரியவில்லை. 100-க்கு 10-வீதம் சம்பளக்குறைவு ஏற்பட்டிருப்பதாலும், வருமான வரியாலும் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் எவ்வகையிலும் கஷ்டப்படவில்லை. அவர்கள் வருமானத்தில் ஏற்பட்டிருக்கும் குறைவைவிட அதிகமான குறைவு ஒவ்வொரு வியாபாரியின் வருமானத்திலும் ஏற்பட்டிருக்கிறது. மற்ற தொழில் நிலையங்களில் சம்பளத்திற்கிருப்பவர்கள் தங்கள் வேலை போய்விடுமோ என பீதியுற்றுக் கொண்டிருக்கையில் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு அதைப்பற்றிச் சிறிதும் கவலை கிடையாது. இவ்விஷயங்களை யெல்லாம் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு எடுத்துக்காட்டுவோமேயாயின், தங்கள் நலத்தைத்தனிப்பட அல்லாது, வரி செலுத்தும் மக்களது பொதுநலத்துடன் சேர்த்தே ஆலோசிக்க வேண்டுமென்ற கொள்கையை அவர்கள் தயக்கமின்றி ஒப்புக்கொள்வரென நான் திண்ணமாகக்கருதுகிறேன். உத்தியோகப் பற்றற்றவர்கள் மிக்க செழிப்புள்ள காலத்தில் அதிகப்படியான வருமானம் பெற்றனரென்றும் ஆனால் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு அத்தகைய வருமானம் கிடைக்கவில்லையென்றும், எனவே இரு சாராரையும் ஒப்பிடக்கூடாதென்றும் சிலர் கூறுகின்றனர். இவ்விஷயத்தில் சுயநல நோக்குடன் நாங்கள் பேசவில்லை யென நான் தெளிவாக அறிவிக்கின்றேன். மிக்கச் செழிப்புள்ள காலத்தில் இலாபமுற்ற வியாபாரிகள் மிகக் குறைவு. ஆனால் தற்பொழுதுள்ள மந்தத்தால் வருமானம் குறையப்பெற்ற வியாபாரிகளின் விகிதம் 100-க்கு 90 ஆகும். இவர்கள் சார்பாகவே வரிச்சுமையைக் குறைக்க வேண்டுமென நாங்கள் கேட்கிறோம்.

1933-34ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் என்னென்ன ஆச்சரியமான இனங்கள் இருக்குமென எங்களுக்குத் தெரியாது. ஆனால் வருமான வரியில் 100-க்கு 25 விகிதமான உபரிவரியை நீக்கமுடியாதபடியும், ஆனால் சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் சம்பளக் குறைவை நீக்கத் தக்கபடியும் நிலைமை அபிவிருத்தி யடைந்திருப்பதாக சர்க்கார் எண்ணி அதை யொட்டிய முறையில் அத்திட்டத்தை அமைப்பதே வரி செலுத்துவோரால் சிறிதும் விரும்பப்படாத ஆச்சரியமாகும். ஒருக்கால் தங்கள் உத்தியோகஸ்தர்களுக்குத் தாங்கள் கொடுத்த உறுதி மொழிப்படி சர்க்கார் நடக்கவேண்டி யிருக்கலாம். ஆனால் அவ்வுத்தியோகஸ்தர்களுக்கு உத்தியோகப்பற்றில்லாதாரின் கருத்து நன்கு எடுத்துக் காட்டப்பட வேண்டுமென நான் வற்புறுத்திக் கூறுகின்றேன். இச்சமயத்தில் இந்திய மக்கள் மீது தங்கள் நல்லுணர்ச்சியை வெளிப்படுத்தும் சக்தி அவர்களிடம் உளது. அவர்கள் அவ்வாறு செய்வரேல் அதை யாரும் என்றும் மறக்கார்."

இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

ராஜம் - ஒரு சிறு கதை.

Short Story.

(எம். எஸ். ஆர். சந்திரன் எழுதியது.)

(ஜனவரி மாதத் தொடர்ச்சி.)

"எனக்குத் தெரியவில்லை, தெரிந்தால்தான் என்ன செய்யப் போகிறீர். எல்லோருக்கும் தெரிந்தால் கல்லென்று கேலிக்கூத்தாகாதா" என்ருர்.

"இப்பொழுதென்ன வாழுகிறது. ஊர் சிறிக்காமலிருக்கப் போகிறதாவென்ன" என்று சொன்னுள் மனைவி.

"சம்மந்திக்கு என்ன சொல்லுவேண்டி, அடிபாவி. அவர் பிள்ளைக்கு ஒரு பிரகசரணப் பெண்ணை விவாகம் செய்து வைத்தாயே என்றல்லவா என்னைத் திட்டுவார். என் செய்வேன் ஐயோ!" என்று பெருமூச்செறிந்தார். என்னென்னமோ சிந்திக்கலானுர். இப்படி மனங்கலங்கிக்கொண்டிருக்கும் சமயம் "ஐயா! ஐயா! தபால், தபால்" என்று தபால்காரன் கூப்பிட, அய்யர் வெளியில் வந்து ஒரு கடிதத்தை அவனிடமிருந்து வாங்கி கவரினுள்ளிருந்த இரு நிருபங்களைப் படித்தார், அதில்,

I

எனதன்புள்ள தந்தைக்கு,

தங்கள் பிரியமுள்ள குமாரன் முத்து சாஷ்டாங்க நமஸ்காரம் க்ஷேமம். நேற்றிரவு திருச்சிக்கு வந்து சேர்ந்தேன். தங்கள் மனதுக்கு விருப்பமில்லாத ஒரு காரியத்தை நான் செய்ய நேர்ந்துவிட்டது. அதற்கு என்னை மன்னிப்பீர்களாக. உஙகள் மனதுக்கும், குலவழக்கத்துக்கும் அது மாறுபட்டதாக இருந்தாலும், என் மனச்சாட்சிக்கு முற்றிலும் சரியானதென்று பட்டிருக்கிறது. பிராம்மண சமூகத்தின் முன்னேற்றத்துக்கும், தேசமுன்னேற்றத்துக்கும், பொருத்தமான காரியத்தை நான் செய்திருக்கிறேன். சாஸ்திர விரோதமான காரியமும் அன்று. நம்ம ராஜாமணியின் மன விருப்பப்படி எனது நண்பன் மணிக்கும் ராஜத்துக்கும் நேற்று சிவில் விவாகச் சட்டப்படி விவாகம் நடந்து ரிஜிஸ்தராகிவிட்டது. மோதிரம் மாற்றிக்கொண்டு விட்டனர். இந்தக் காரியம் நடந்ததானது தங்களுக்கு அடங்காத கோபம் விளைவித்திருக்கும். கோபத்தின் காரணமாக எங்களை உதாசீனம் செய்யலாகாது. மேலும் மாப்பிள்ளை ரங்கனுக்கு ஸ்வர்ணத்தைக் கலியாணம் செய்து கொடுத்த விஷயமாய்த் தங்களுக்கு ஏற்பட்டசெலவை பொருட்படுத்தாமல் ராஜாமணியின் விவாகத்தில் செலவிட்டதாகவே நினைத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் ஏதாவது வித்யாசமாக நடந்துகொண்டால் நானும், ராஜாமணியும் வீட்டுவழி வரமாட்டோம். நிச்சயமாக நம்பிவிடுங்கள். இன்னும் சில காலத்துக்கு ராஜாமணி இருக்கிறஇடம் நான் சொல்லமுடியாது. சம்பந்தி அய்யருக்கு விஷயம் தெரிந்து கோபித்துக் கொண்டால் என் பையனுல் வந்த வினை என்று தெரிவித்துவிடலாம்.

இந்தச் சிறிய கலவரத்துக்கும், வீண் செலவுக்கும், தங்கள் மனக்கவலைக்கும் காரணமாகவிருந்த என்னை மன்னிப்பீர்களாக.

இங்ஙனம்,

தங்கள் உண்மையுள்ள புத்திரன்,

முத்து.

II

எனது பேரன்புள்ள தந்தையின் திருவடிகளில் நமஸ்கரித்து இதுகாறும் தங்கள் மனம்போல் நடந்துகொண்ட தங்கள் அருமைப் பெண் ராஜாமணி மிக்க தாழ்வுடனும், பணிவுடனும் எழுதிக்கொண்ட கடிதம். தஙகள் மனதுக்கும், தாயாரின் மனதுக்கும் மாருன காரியத்தைச் செய்யத்துணிந்ததற்கு என்னை முதலில் மன்னித்து ரட்சிக்கவேண்டும். மணியை மணந்துகொள்ள மனம் துணிந்துவிட்டது. இந்தியாவில் விவாக சட்டப்படி நாங்களிருவரும் மணந்துகொண்டுவிட்டோம். இனி என் மனதை நான் மாற்றமுடியாத நிலையில் இருக்கிறேன். எனது தோழியும் எனது பர்த்தாவின் சகோதரியுமான ஸ்வர்ணத்தின் விவாகத்துக்குத் தாங்கள் செலவிட்டதை எனக்குச் செலவிட்டதாக நினைத்துக்கொள்ளவேணும். அவள் ருதுவாகி புக்கஹம் செல்லும் வரை நான் தங்களை காண்பதரிது. இச்சமயம் நான் அங்கு வருவேனுகில் உண்மை வெளிப்பட்டுவிடும். ஸ்வர்ணத்தையே நீங்கள் ராஜமாக கூப்பிட்டு என்னிடம் எந்தமாதிரி அன்புகாட்டி வந்தீர்களோ அதே மாதிரியாக அவளை நடத்தி வரவேணடும். என் நிமித்தம் அவளை துன்புறுத்துவதாயின் தங்கள் மனதுக்கு விரோதமாக நடந்தபின் என் பர்த்தாவின்மனம் புண்ணுகுமாறு நடந்துகொண்ட பாவியாகிவிடுவேன். பின்னர் தாங்கள் என்னைக் கண்ணுற் பார்ப்பதும் அரிதாகிவிடும். ஆகையால் தற்போது தங்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைப் பொருட்படுத்தாமல் அவற்றிற்குத் தக்கவாறு நடந்துகொள்ளும்படி வேண்டிக்கொள்ளுகிறேன். அடியாளை, தங்கள் அருமைக் குழந்தையை, மன்னித்துக் கார்க்குமாறு வணக்கமாய் பிரார்த்தித்து கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,

தங்கள் உண்மையுள்ள புத்திரி,

ராஜம்.

கடிதங்களை படித்து முடிந்ததும் கடிதங்களை கீழேவைத்துவிட்டு இருகைகளாலும் தலையில் அடித்துக்கொண்டார். அட ஈசா இது உன் திருவிளையாட்டா? ஐயோ என்ன செய்வேன் என்று அழவாரம்பித்தார். பின்னர் மெல்லிய குரலில் அடியே வெளிக்கதவைச் சாத்து ஆபத்து வந்துவிட்டது" என்ருர். மனைவியும் வேகமாகச் சென்று கதவைத் தாழ்ப்பாளிட்டுத் திரும்பி வந்து அவர்முன் வணக்கமாக நின்று "என்ன சங்கதி ராஜமும் முத்துவும் உயிருடனிருக்கிருர்களா?" வென்ருள். கவலை இருவருக்கும் அதிகரித்தது. விஷயம் தெரிந்து அய்யர் அழுதார். விஷயம் தெரிந்துகொள்ளாமல் தன்கணவன்அழுகிருரேஎன்று ருக்மணியும் அழ ஆரம்பித்தாள். இச் சம்பவங்களையெல்லாம் உள்ளிருந்தபடியே ஸ்வர்ணம் கேட்டுக்கொண்டிருந்தாள்.

சில நிமிஷங்கள் கழிந்தன. கடிதத்தில் கண்டிருக்கிற சங்கதி தெரிவிக்காமலே நீங்கள் துக்கிக்கின்றீரே சங்கதியை நான் தெரிந்துகொள்ளலாகாதா என்று ருக்மணி கேட்டாள். அவள் விருப்பப்படி கடிதத்திலிருக்கின்ற விஷயங்களை மெதுவாகப் படித்துக்காட்டினுர். ருக்மணிக்கு துக்கமென்மேலும் அதிகரித்தது. எப்படியாவது பிள்ளையும் பெண்ணும் வீட்டுக்கு வந்துகொண்டிருந்தால் போதுமென்பதே ருக்மணியின் பிரார்த்தனை. ஒருகால் பிள்ளையையும் பெண்ணையும் எங்கு தன் கணவன் வெறுத்து விடுவரோ என்ற பயம் அவளுக்கு ஏற்பட்டது. தயங்கி தயங்கி மிகுந்த கவலையுடனிருந்தாள். இந்த நிலையில்,

"எண்டி, நான் இனி என்ன செய்வது எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. சங்கடங்கள் அதிகரித்துவிட்டன. நான்

கோபிக்கிறதில்லே என்று உனக்கு சத்தியம்செய்து கொடுத்து விட்டேன். அப்படி மீறி கோபித்துக்கொண்டு ஏதாவது செய்வதானுல் பிள்ளேயையும் எனது அருமைப் பெண் குழந்தை-அந்த ராஜாமணி-யையும் நான் பார்க்கக் கூடாமலிருக்க நேரிடும். பிராமண வகுப்பாருக்குள்தானே விவாகம் அதனுல் பாதகமில்லே. நம்மாலாவது ஒன்றுமில்லே என்று சும்மாயிருக்கலாமென்றுல் அந்த சம்பந்தி வெங்கட்டரமண அய்யரிடம் இந்த விஷயத்தை எப்படி நான் சொல்ல முடியும், நமக்கு பிரஹசரன சம்பந்தம் பாதகமில்லேயென்று வைத்துக்கொண்டு நம்முடைய மனதை சமாதானப்படுத்திக் கொண்டாலும், அவர் தன் பையனுக்கு நம்மபெண்ணென்றல்லவா விவாகத்துக்குச் சம்மதித்தார். மேலும் பிரஹசரணமென்றும் தாய்தந்தையற்ற குழந்தையென்றும் தெரிந்தால் நம்மீது வழக்கிடுவரே. பலர் நம்மை எள்ளி நகையாடுவார்களே நாம் அல்லவா ஏதோ மோசம் செய்துவிட்டோம் என்று பிறர் நிந்தனே செய்வார்களே. இத்துடன் நில்லாமல் பிறர் பெண்ணே தன் பெண்ணுகக் கருதி விவாகம் செய்து கொடுத்தது குற்றமானுல் நமக்கு தண்டனே கிடைக்குமே—என் முத்து இஷ்டத்தின்மேல் நடந்ததாக ருசுப்பித்துவிட்டால் குற்றம் ஏது—பிறகு அவரை ஏமாற்றியதாகக் குற்றந்தான் நிற்கும். இருக்கட்டும், மாப்பிள்ளே ரங்கன் நம்ம பையன் மாதிரி தந்தை சொல் கேட்பதில்லே யாகையால் அவன் இந்தப் பெண்ணேயே கூட்டிச் சென்றுல் தந்தைதான் என்ன செய்ய முடியும், நம்ம வீட்டில் நடந்திருக்கிறதைவிடவா இது பெரியது. நாமே இதையெல்லாம் சஹிக்கவேண்டியிருக்கிறது. ஒருகால் தந்தையின் பேச்சைக் கேட்டு சுவர்ணத்தைத் தள்ளிவைத்தால் அவள் கதி என்ன? நமக்கல்லவா அந்த பாபம் வந்து சேரும். ஹே, ஈசுவரா, இப்பொழுது எனக்கு என்ன கதி? இப்பொழுதிருக்கிற நிலேயில் நான் தற்கொலே செய்து கொள்வதுதான் மேலானதென நினேக்கிறேன்," என்று சொன்னபொழுது,

"ஐயோ, அப்படிக்கொன்றும் செய்துவிடாதேயுங்கள், நான் என்ன செய்வேன்" என்றுள் ருக்மணி.

"நீதான் சொல்லடி. இப்பொழுது நடந்ததெல்லாம் போகட்டும். சம்பந்தி இதைத் தெரிந்து கொண்டு சுவர்ணத்தைத் தள்ளிவைத்து விட்டால் அவள் கதி நிற்கதிதாண்டி, இந்த படவாப்பயலாவது அவளேக் கலியாணம் பண்ணிக் கொண்டானு, பிறரிடமல்லவா நம்ம பிள்ளே நம்மைக் காட்டிக் கொடுத்துவிட்டான். அவருக்கு யார் பதில் சொல்லுவது. அதுதான் பெரிய ஏக்கமாக இருக்கிறது, என்று சொல்லிவிட்டு சில நிமிஷங்கள் மௌனமாகவிருந்தார். இதை தட்டி மறைவில் கேட்டுக்கொண்டிருந்த சுவர்ணத்துக்கு அப்பொழுது தான் கவலே ஏற்பட்டது. தன் கணவன் தன்னே இன்னுரென்று உண்மையில் அறிந்து விட்டால் தன்னேத் தள்ளி வைத்து விடுவானே என்று பயந்தாள். தன் தமையன் மணி ராஜத்தை மணந்து கொண்டிருக்க முத்து தன்னே ஏன் மணந்துகொள்ள இசையவில்லே. தன்னே மணந்து கொண்டிருந்தால் இந்த சங்கடமெல்லாம் ஏற்பட்டிராதே. இவர்கள் செய்த சூழ்ச்சி நமக்குத் தெரியாமல் போய் விட்டது, இருந்தாலும் மணியும், முத்துவும் நம்மைக் காப்பாற்றுமல் விட்டுவிட மாட்டார்கள் என்பது நிச்சயம். எல்லாவற்றிற்கும் ஈசன் செயல் என்று எண்ணி எண்ணி மனங்கலங்கி உள்ளேயே இருந்தாள்.

"சீக்கிரம் சுவர்ணமும் பெரியவளாகி மாப்பிள்ளேயும் அழைத்துச் சென்றுல் பிள்ளேயாருக்கு 108 மோதஹமும், ஸ்ரீ ஆஞ்சனேயருக்கு 108 வடை மாலேயும் போட்டு நைவேத்யம் செய்கிறேன் என்று ருக்மணி வேண்டிக்கொண்டாள்.

"ஒன்றும் கலவரமில்லாமல் காரியங்கள் நடந்து விட்டால் ஸ்ரீ விக்னேஸ்வரருக்கு 108 தேங்காய் உடைக்கிறேன்" என்றுர் அய்யர். அந்திப்பொழுது வந்ததும் அவரவர்கள் தத்தம் வேலேயை வழக்கம்போல் கவனிக்கலானுர்கள்.

(தொடரும்)

சென்னேயில்

ஏஜண்டுகள்

தேவை.

"வர்த்தக ஊழியன்" பத்திரிகைக்கு சந்தாதாரர்கள் சேர்க்கவும், பத்திரிகையை விற்கவும், விளம்பரங்கள் சேகரிக்கவும் செல்வாக்குள்ளஏஜண்டுகள் சென்னேயில் தேவை. விபரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்,
"வர்த்தக ஊழியன்"
திருச்சினுப்பள்ளி.

(12-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஸர் ஷுஸ்டர்

ஸர் ஜார்ஜ் ஷுஸ்டர் பேசியதன் சாரம் வருமாறு:—

இத் தீர்மானத்தைப்பற்றி நான் ஒன்றும் சொல்லாமலிருப்பது நலமென எண்ணினேன். ஏனெனில், நான் ஏதாவது சொல்லின், சர்க்கார் தம் வரவு செலவுத் திட்டத்தில் என்ன செய்ய உத்தேசித்திருக்கின்றனர் என்பதுபற்றி எனது வார்த்தை பலவகையாகப் பொருள்படுத்தப் படக்கூடும். ஆனுல் நான் மௌனம் சாதிப்பதன் மூலம், உங்களுடைய கோரிக்கைகளில் சில, எவ்வகையிலும் எதிர்க்கப்பட முடியாததாகுமென நீங்கள் எண்ணிவிடக் கூடாதென்றதற்காக நான் பேசுகிறேன்.

ஸர் இ. வி. பெந்தால் இந்திய சர்க்காரின் நிதி மெம்பராக இருந்தால், நான் நடந்து கொள்ளும் முறையிலேயே அவரும் நடந்துகொள்வா ரென்பது திண்ணம்.

வரி விதித்தல் என்பது விரும்பத்தகாததுதான். ஆனுல் சிறந்த செல்வநிலே இருந்துவர, இந்திய சர்க்கார் கையாண்டுவரும் உயரிய அனுஷ்டானங்களே விட்டுவிட வேண்டுமென உங்களில் எவரும் கூறமாட்டீர்களென நான் உறுதியாக எண்ணுகின்றேன்.

குறிப்பாகச் சில வரிகள் கைத்தொழிலுக்கு மிக்க இடையூறு விளேவிப்பதாகக் குறை கூறப்படக் கூடுமென்பதை நான் பூர்ணமாக அறிந்திருக்கின்றேன். உதாரணமாக சணல் வரி தற்பொழுதுள்ள விலேவாசிகளின் நிலேயில், மிக்கத் துன்பம் விளேவிப்பதாகக் கருதப்படலாம். சர்க்கார் வேறு வழிமூலம் வருமானம் தேடிக்கொள்ள வேண்டுமென நீங்கள் எண்ணுவீர்களாயின் வியாபாரத்தைப் பாதிக்காத வேறு திட்டமான யோசனேகளே வெளியிடுங்கள். வரிச்சுமையை சுமக்க முடியாதென சொல்வது மட்டும் போதாது. நிர்மாண யோசனேகளே வெளியிடுவதன்மூலம் நீங்கள் எனக்குதவிசெய்ய வேண்டும்.

மலபாரில் 1932ம் வருடத்தில் 10300 ஏக்கர் இஞ்சி சாகுபடி செய்யப்பட்டது. அதற்கு முந்தின வருடத்தில் 10635 ஏக்கர். 3700 டன் சுக்கு கிடைக்குமென்றும் முந்தின வருடத்தைவிட 200 டன் குறைவென்றும் தெரிகிறது. 500 பவுன் எடையுள்ள ஒருகண்டி 34 ரூபாய் முதல் 38 ரூபாய் வரையில் விற்றது.

M. SULTAN ABDUL KADER.,

Sultania Medical Hall, Porto-Novo. S. A. District, India.

இதனை வாசிக்கும் புத்திமான்களுக்கும் பக்திவான்களுக்கும் ஓர் விண்ணப்பம்.

இழந்துபோன பலத்தை 1-வேளை லேகியம் சாப்பிட்ட 1-மணிநேரத்தில்கொடுக்கும்

கவனியுங்கள் ! — **கவனியுங்கள் !!**

பர்மா கவர்னரின் டாக்டர் சர்டிபிகேட்.

நான் இரங்கூன் பஞ்சசக்தி கம்பெனியிலிருந்து பரங்கிப்பேட்டை சுல்தானியாவைத்தியசாலை சொந்தக்காரரால் செய்யப்பட்ட சிட்டுர்குருவி சத்தின் லேகியம் வரப்பெற்று அருந்திப்பார்த்தேன். அது தேகவலுவையும் வீரிய விர்த்தியையும் தாது புஷ்டியையும் கொடுக்கிறது. இன்னும் இந்தலேகியத்தில் அனேக குணங்களிருக்கின்றன.

டாக்டர் சையத்மேஜர் அலிகான் சாகிபு,
கவர்னர் மாளிகை, பர்மா. 20—12—1924.

கொழும்பு போலீஸ் மாஜிஸ்டிரேட் மகாகனம் பொருந்திய H. P. கப்மான்ஸ் அவர்களால் 6-12-1927ல் 864 நெ. ரிபோர்ட்டு. விலோன் கவர்மெண்டு அன்லிஸ்ட் (மருந்து பரிசோதக அதிகாரி) மகாகனம் பொருந்திய C. T. ஸைமன்ஸ் அவர்களுச்கு அனுப்பி 13—12—1927ல் பரிசோதனை செய்தது. ரிபோர்ட்டு நெ. 880, 13—12—1927.

மெடல்பெற்ற சிட்டுக்குருவி சத்தின் லேகியம்.

நன்றிபிற்குகந்த அன்பர்காள்! அருமையும் பெருமையும் கீர்த்தியும்பெற்ற இந்த அற்புத குணந்தங்கிய லேகியத்தை உபயோகித்த உத்தமர்கள் குணத்தால் சிறந்ததுதான் என்று இதனைப் பன்முறையும் புகழுவார்கள். இச்சிறந்த அபூர்வ லேகியத்தை உபயோகித்தால் உற்சாகமடைவீர்கள் பண்டைகாலத்தரசர்கள் தத்துவங் குறையாது வாழ்ந்திருந்தார்களென அரபி பார்சி கதைகளிலும் தமிழ் புராணங்களிலும் வாசித்திருக்கிறோமல்லவா? அத்தகைய குணத்தை தரக்கூடிய அற்புத சஞ்சீவிகளில் இந்த சிட்டுக்குருவி சத்தின் லேகியமும் ஒன்றென்பதை அனுபவத்தால் அறிந்து கொள்வீர்கள். இது எங்கள் முன்னோரின் ஏட்டுப்பிரதியிலுள்ள அனுபவ முறை.

இந்த லேகியம் அசல் பாகத்திற்கோர் விகற்பமின்றி தங்கம், வெள்ளி, செம்பு, பவழம் ஆகிய பஸ்பம் செந்தூரங்களும், அம்பர், கஸ்தூரி, குங்குமப்பூ, எட்டுவித மிஸ்ரிகள், பத்துவகை விதைகள், எழுவகை மூலிகை, சூரணங்கள் ஐந்துவேர் வகைகள், மற்ற அருமையான சரக்குகள் (192-ம்) நிறையளவு குறையாதபடி பாகஞ்செய்து வாலையந்திரத்திலிறக்கிய சிட்டுக்குருவி சத்தும் சேர்த்துப் பாகமாய்ச் செய்யப்பெற்றது.

இந்த சிட்டுக்குருவியின் குணத்தைப்பற்றி சிந்தாமணி என்னும் சாஸ்திரத்தில் சித்து புருஷரின் உத்தம வாக்கியமும் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, பலகாலும் பலபேருக்கும் கொடுத்து யாம்கண்ட உபயோகத்தையும் சொல்கின்றோம்.

லேகியத்தின் குணமாவன.

வாதபித்த சிலேத்ம மிகுதிக்குறைவால் ஏற்படும் இரத்தக் குறைவு, எழுவகைத் தாதுக்களின் பலஹீனம், அஸ்திவெட்டைச்சூடு, வீரிய நஷ்டம், சதா இடுப்புவலி, மலச்சிக்கல், பசிமந்தம் பித்தாதிக்க உஷ்ணவாய்வு, கிருமிரோகம், துர்நீர்வியாதிகள், தேகத்தில் ஓடித்திரியும் பலவகை வாய்வுரோகம், பார்சவாய்வு நெஞ்சுவலி, விரைவாதம், கைகாலசதி, மறதி, மனோசக்தி நாளுக்குநாள் குறைதல் முதலியன நிவர்த்தியாகிவிடும். தேக உஷ்ணத்தை சமனப்படுத்தி இரத்தத்தை விர்த்திசெய்து புத்திசாதுர்யத்தைக் கொடுத்து தேகத்திற்கு நல்ல பலத்தை உண்டாக்கும். இந்த லேகியத்தை பால்யர் முதல் வயோதிகர் வரையில் சாப்பிட்டால் தேகத்திற்கு நல்ல பலத்தைக் கொடுக்கும். இதை ஒருதரம் பரீக்ஷை செய்து பார்க்கவும்.

40-நாள் சாப்பிடும் 16-பலம் டப்பி விலை ரூ. 12-0-0. 20-நாள் சாப்பிடும் 8-பலம் டப்பி விலை ரூ. 6-8-0. 12-நாள் பரீக்ஷை செய்ய 5-பலம் டப்பி விலை ரூ. 3-8-0. 8-நாள் 16-வேளை 2-பலம டப்பி 1-க்கு ரூ. 1—4—0. 4-நாள் 8-வேளை 1-பலம் டப்பி 1-க்கு ரூ. 0—12—0. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

☞ பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், குவாலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசிகள் மருந்தின் கிரயமும் தபால் சார்ஜ் ரூ. 2—0—0யும் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷியூரார் வி. பி. யில் அனுப்பும்படி எழுதும் கடிதங்கள் அங்கீகரிக்கப்படமாட்டா. விலாசம் தெளிவாய் எழுதவும்.

☞ எமது விலாசம் :—

எம். சுல்தான் அப்துல் காதிர்,
சுல்தானியா வைத்தியசாலை,
பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா, இந்தியா.

☞ எமது அடியக்கமங்கலம் ஸோல் ஏஜண்டு :—

☞ மு. முகம்மது ஹனிபா,
செட்டி தெருவு,
அடியக்கமங்கலம், P. O. நாகப்பட்டணம் தாலுக்கா.

GOVERNOR'S ADVICE TO TRADERS.

"The successful working of the new Constitution in India as a whole cannot be looked for unless adequate provision is made by and under the new Constitution for special problems in particular provinces in such a manner as to ensure the healthy, political and economic development of each constituent unit of the Federation" declared Sir John Anderson, the Governor of Bengal, in declaring open the proceedings of the Associated Chambers of Commerce at the offices of the Bengal Chamber of Commerce last month.

His Excellency said he shared with representatives of the Chambers the realisation of the number and gravity of the economic problems with which they were confronted, accentuated as they were by political uncertainty not only in India but throughout the world.

His Excellency referred to the striking improvement in the political situation and the restoration in a substantial degree of normal internal trading conditions after a period of organised interference dictated at least as much by political as economic aims. He thought that cheap money, which was now available in plenty, would, when confidence was restored, play an important part in promoting commercial and industrial development.

Speaking on the Ottawa Agreement, His Excellency said that the decision of India to enter voluntarily into an economic alliance with the rest of the Empire was certainly of profound significance.

Dealing with the constitutional problem, the Governor declared that it should rightly occupy a large place in the minds of the commercial community. The old theory that the less commerce and politics were mixed up the better had to be substantially modified, as in the modern state the functions of government necessarily impinged more and more on the interests of trade. Those who represented trade and industry should therefore have a definite role to play in the sphere of government. It was of direct concern to them to see that the new constitution contained adequate provisions in regard to equality of treatment of commercial interests, and to ensure the maintenance of international credit on which the interests of the government as well as the commercial community and people ultimately depended.

Sir John Anderson hoped that the commercial community would take greater interest in the Legislature, so that their representatives would be in a position to hold their own with dignity and carry conviction in debate. In this connexion he urged the European commercial community to induce their young men to take more and more interest in the study of Indian history and of the manners and customs of the people among whom their lot had been cast.

Sir E. C. Benthall in his speech asking the Governor to declare open the proceedings of the Chamber, said:—

"I am sure I am voicing the opinions of our constituent members when I say that you are particularly welcome because you are a man who has made your great reputation, not through the precarious and unstable byways of political advancement, but by the solid achievement of administrative efficiency—a quality which we, in trade and commerce paraphrase as business ability. It is these qualities which India most surely needs to-day, for the problems of economy and finance are foremost in men's minds and these will remain when politicians have run their course".

Dealing with the Ottawa Agreement, he said, it was doubtful whether there was sufficient appreciation of the tremendous importance of the Agreement or of the decision of the Legislature to accept voluntary attachment to the British economic and financial system. In his opinion, the Assembly had taken a perfectly correct view when they had held that it was impossible to assess the advantages of the Agreement until a certain measure of time had passed. Although the financial &economic results of the Agreement might take some time to make themselves clear, the moral results, he thought, would be immediate, as the Agreement had linked closely the destinies of the two peoples.

The speaker next dealt with commercial discrimination, and said that the question had been exercising their minds. Although no finality had been reached on the question, he felt confident that His Majesty's Government and the Government of India were out to see justice done. He was personally confident that the large masses of Indian opinion were only too anxious to see them obtain a "free scope for activities in the larger interests of India."

In this connexion the speaker paid a tribute to Sir Tej

Bahadur Sapru and Choudhury Zafrullah Khan, who displayed their willingness to give them a fair deal. "They are anxious to promote Indian industries; so are we," said the speaker. "They are anxious to help the masses and protect the primary producer, so are we. Our views and the views of such people are not incompatible. But we have no intention of abandoning our position on this subject.

Referring to the financial credit of the country, the speaker said that the Associated Chambers of Commerce were in favour of the early establishment of a Reserve Bank, but being practical men they appreciated the difficulty of accumulating the necessary reserves. He did not consider that there was a possibility of the scheme falling to the ground for political reasons but he thougt that there was a grave danger of the setting up of a Reserve Bank merely as administrative machinery with in adequate reserves. The Associated Chambers would study the problems connected with the Reserve Bank with a view to overcoming the difficulty with the minimum delay.

A number of resolutions were adopted. The first urged the initiation, without delay of legislation empowering the Government of India to take prompt executive action as and when necessary, subject to general ratification by the legislature, to protect indigenous industries against the import of goods from foreign countries which by reason of depreciated exchanges bounties, subsides, or other artificial circumstances, may be sold in India at prices which would be detrimental to indigenous industry.

The second resolution recording emphatic opposition to any change in regulations as proposed at the recent Madrid Telegraph Conference either for plain language or for code telegrams. Such change he said, might increase the cost of telegraphic communication or interfere with the use of the existing private codes.

A resolution welcomed the steps taken to constitute a Federation of Employers Associations in India.

(1) Resolutions urging the Government to reduce the import duty on motor vehicles, in order to give every oppurtunity for the development of the internal communications of the country.

(2) urging the importance of avoiding any further delay in undertaking necessary railway maintenance and repair, as the railways should be in possesssion of full efficiency to handle the increased traffic when the trade revival occured.

(3) urging the Government not to sanction any expenditure in connexion with the opening up or developing of any further railways or State collieries, in view of the fact that ample coal at reasonable rates was available from privately owned collieries now in existence or being developed.

(4) urging the Government to increase the representation of the Punjab Chamber of Commerce in the newly constituted Legislature.

A resolution moved by the Karachi Chamber recommended the reduction of postal rates by air mail to at least the level of that charged from the United Kingdom to India.

The next recommended the enactment of legislation to provide for the registration of trade marks in India in such a manner as would give a registered user of any mark the right to an immediate injunction to prevent the use of such mark, or any colourable imitation of it. If the Customs had no authority under the Sea Customs Act to detain goods designs on which were infringements of designs coming within the purview of the Indian Patents Designs Act, immediate steps should be taken to amend the law so as to give Customs authorities such power.

The next urged the Secretary of State for India and the Government of India, in the event of Burma not being separated, to allot one seat in the lower House of the Central Legislature to the Burma Chamber of Commerce in addition to the seat already allotted by the Franchise Committee.

"That a statutory railway authority should be provided for in the new constitution, in terms which would specify its machinery and powers, and while leaving the control of policy to the Legislature, would clearly limit the right of intervention of the latter in the detailed administration of the railways; that the establishment of a railway authority of such a nature be taken in hand with the least possible delay and if necessary a commission should be appointed at an early date for the purpose of examining the factors regulating control and administration, and making proposals for the future, with particular reference to the conditions which should govern them under the new constitution to the best advantage of the public; and that any such commission, if appointed, should be small in numbers, should be largely recruited in India, and should include representatives of the commercial community and the general public."

BURDEN OF TAXATION.

"This Association draws the attention of the Government of India to the heavy burden of taxation now borne by the commerce and industry of this country, and records its opinion that any improvement in the financial situation should be reflected in the first place by alleviation of this burden."

THE GOVERNMENT'S ATTITUDE.

Sir George Schuster (Finance Member, Government of India) replying, said he wanted to keep silence on the resolution, as what he said might be interpreted one way or the other as to what the Government proposed to do in the Budget. But in observing silence he did not want it to be understood that some of their points were unanswerable.

As far as the general case was concerned, he appreciated every word so far said, but was sure that if Sir Edward Benthall had had to fulfil the responsibilities of Finance Member of the Government of India he would have approached the matter in the same way as the speaker (Sir George Schuster) had done.

Sir George thanked European business men for the way their representatives had supported the financial proposals in the Legislative Assembly. He wanted them to look at both sides of the question. Taxation, considered by itself, was highly undesirable, but none of them would ever suggest a departure from the traditions of sound finance which the Government of India were following. Those traditions had stood them in good stead, and he felt sure they would not press for any departure from them.



Would they, then, he asked, press for a reduction of expenditure in their directions, as for example, in military expenditure? If so, they must face what it meant. They had already achieved remarkable success in reducing the military expenditure and he thanked the Military Retrenchment Committee, of which Sir Edward Benthall had been a member. That retrenchment had been possible without diminishing the fighting efficiency of the army. If they wanted a further reduction, it could not be achieved without affecting the Army's fighting efficiency. If they wanted that, wanted that, let them say so frankly and honestly.

Sir George said he could not help feeling that they should not press this. He certainly fully appreciated that certain taxes might be criticised as being specially burdensome to and as hampering industry. The jute tax, for example, might be regarded as a heavy burden at the present level of prices. If they wished now to suggest that the Government in its need for revenue, ought to seek an alternative means which would be less hampering to trade, then let them make definite proposals to that effect. It was not quite enough to say that they could not stand a tax any longer They sould help him with constructive proposals.

Mr. C.D. Tholasiram Mudaliar B.A., B.L. Addtional District Munsiff Nellore delivered judgment on 20th Jan. 33 dismissing the claim of Rs. 353-13-0 made by one Mr. Ballaji Bhoormull of Cuddapah against M. & S.M. Ry. for collection of alleged excess freight on goods consigned from Nellore to Shalimar in 1931. The details of the case have already appeared in January issue of this journal. The suit was resisted by the company on the ground firstly that it was entitled according to the rules to collect excess freight at destination if the rate already charged was found incorrect, & secondly that the goods clerk who gave information about the rates at the booking station was not authorised by the company to do so and that the company was not bound by any representation he might have made.

WANTED

Capable agents of influence among merchants in all the important towns to canvass subscribers and to get advertisements for "Varthaga Oolian". Liberal terms to really capable workers.

Apply to:—

The Manager,
Varthaga Oolian,
Trichinopoly.

நாணயமாற்றம்.

27—1—1933

பி. வி. லண்டன் தந்தி 18 3/32 பென்சு 1-ரூபாய்க்கு

பி. வி. லண்டன் தரிசனம் 18 3/32 பென்சு 1-ரூபாய்க்கு

	பென்சு.
லண்டன் தந்தி விற்கிற விலை.	·18 $\frac{1}{8}$
தரிசன உண்டி விற்கிற விலை	18 $\frac{1}{8}$
தந்தி வாங்குகிற விலை	18 3/16
ஷை தரிசன உண்டி	18 7/32
,, 1 மாத தரிசன உண்டி	18 7/32
,, 2 மாத தரிசன உண்டி	18 $\frac{1}{4}$
,, 3 மாத தரிசன உண்டி	18 $\frac{1}{4}$
,, 4 மாத தரிசன உண்டி	18 9/32
,, 6 மாத தரிசன உண்டி	18 $\frac{11}{32}$

பிரான்ஸ் மேல் தரிசன உண்டி விற்பனை ரூ. 100-க்கு பிராங்கு 635.

ஜர்மனி தரிசன உண்டி விற்பனை ரூ. 100-க்கு மார்க்கு 104.

அமெரிக்கா தரிசனஉண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 405.

அமெரிக்கா தரிசன உண்டி வாங்குவது டாலர் 100-க்கு ரூ. 380.

சிங்கப்பூர் தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 156.

சிங்கப்பூர் தரிசன உண்டி வாங்குவது டாலர் 100-க்கு ரூ. 150.

ஹாங்காங் தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை டாலர் 100-க்கு ரூ. 93

ஷாங்காய் தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை டேயல் 100-க்கு ரூ. 120.

ஜப்பான் தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை என் 100-க்கு ரூ. 90.

ஜப்பான் 2 மாததவணை உண்டி வாங்குவது என் 100-க்கு ரூ. (பெயரளவு)

ஜாவா தந்தி அல்லது தரிசன உண்டி விற்பனை ரூ. 100-க்கு கில்டர் 59.

ஜாவா தந்தி அல்லது தரிசன உண்டி வாங்குவது ரூ. 100-க்கு கில்டர் (பெயரளவு)

லண்டன் அமெரிக்கா மேல் தந்தி ஸ்டர்லிங் பவுன் 1-க்கு டாலர் 3·39 $\frac{3}{8}$.

பாரிஸ் லண்டன் மேல் தந்தி ஸ்டர்லிங் பவுன் 1-க்கு பிராங்கு 86 15/16

—

சர்க்காரின் புதிய கடன்

இந்திய சர்க்காரின் புதிய கடன் தொடங்கப்பட்டதிலிருந்து 15 நிமிஷ காலத்திற்குள் அளவிற் மிஞ்சியதொகை சேகரிக்கப்பட்டு விட்டதாம்.

பொக்கிஷ இலாகா அறிக்கை யொன்று பின்வருமாறு கூறுகின்றது.

1929-47 வருஷத்திற்குரிய 100-க்கு 5 வீதம் வட்டியுடைய யுத்தக்கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்களும் 1933-ம் வருஷத்திற்குரிய 100க்கு 5 வீதம் வட்டியுடைய கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்களும் 1933-36 வருஷத்திற்குரிய 100க்கு 6 வீதம் வட்டியுடைய கடன் பத்திரங்களை வைத்திருப்பவர்களும் 1960-70 வருஷத்திற்குரிய 100க்கு 4 வீதம் வட்டியுடைய பத்திரங்களுக்கு மாற்றிக்கொள்ளலாகும். இந்தப் புதிய கடன் 1926ம் வருஷம் மே மாதம் 25ம் தேதியன்று இந்தியா சர்க்கார் வெளியிட்ட அறிக்கையின் நிபந்தனைகளை யொட்டியதா யிருக்கும், அந்த நிபந்தனைகள் வருமாறு:—

கடன் மாற்ற நிபந்தனைகள்:—

1929-47 வருஷத்திற்குரிய 100க்கு 5 வீதம் வட்டியுடைய யுத்தக்கடன் பத்திரங்கள்:—100 ரூபாய் மதிப்புடைய இப்பத்திரங்களுக்கு 1960-70 வருஷத்திற்குரியதும் 100க்கு 4 வீதம் வட்டியுடையதுமான புதியபத்திரங்கள் அதே மதிப்புக்கு அளிக்கப்படும் இப் புதிய பத்திரங்கள் அளிக்கப்படும்போது (1) எழரை ரூபாய் ரொக்க போனசும் (2) பழைய பத்திரங்களின் மீது 14-3-33 வரையில் 100க்கு 5 வீதம் சேரும் வட்டியும் அளிக்கப்படும்,

1933ம் வருஷத்திற்குரிய 100க்கு 5 வீதம் வட்டியுடைய கடன் பத்திரங்கள்:—100 ரூபாய் மதிப்புடையபழைய பத்திரங்கள் புதிய பத்திரங்களுக்காக மாற்றப்பட்டால் அதே மதிப்புடையதும் 100க்கு 4 வீதம் வட்டியுடையதுமான புதிய பத்திரங்கள் அளிக்கப்படுவதோடு, (1) எட்டரை ரூபாய் போனஸும், 14—3—33 வரையில் 100-க்கு 5 வீதம் சேர்ந்த வட்டியும் ரொக்கமாக அளிக்கப்படும். இதற்கு வருமானவரி கிடையாது;

1933-36 வருஷத்திற்குரிய 100 க்கு 6-வீதம் வட்டியுடைய கடன் பத்திரங்கள்:—இவற்றை 1960-70 வருஷத்திற்குரிய 100-க்கு 4-வீதம் வட்டியுடைய புதிய பத்திரங்களாகமாற்றிக்கொள்ளும்

கப்பல் செய்தி.

சென்னை துறைமுகத்தில் பிப்ரவரி மாதத்தில் எதிர்பார்க்கப்படும் கப்பல்களின் பெயர்களும் தேதிகளும்:—

மகசுத் 1, சிட்டி ஆப் கில்ட்போர்ட் 2; அம்பாய்சல் 4, மணிலா 5, கியர்பெல்சு 8, கிளான் மன்ரே 9, ரோஹறு, கிளான் மாக் பிரைட் 10, மலக்கண்டு 11, பீகார், சிட்டி ஆப் பிளாரன்சு 14, சிட்டி ஆப் யார்க் 16, சிட்டி ஆப் பூனு 17, வின்ஸ்ட்ரா 20, விபயன்டோ 22, ஜீன்லெ போர்டோ 23, கிளான் முர்ரே 24, மாஹுட் 25, பிர்ச்பாங்25, மணிலா28.

——

விண்ணப்பதாரர்கள அதற்கு 15-3-33 முதல் வட்டி பெறுவார்கள். புதிய பத்திரங்களை அவர்கள் பெறும்போது எட்டரைரூபாய் போனஸும், 14-3-33 வரை பழைய பத்திரங்களுக்கு 100 க்கு 6-வீதம் எறிய வட்டியும் ரொக்கமாக அளிக்கப்படுவர்.

கடன் மீட்பு உரிமை.

1—3—17ல் இந்தியா சர்க்கார் வெளியிட்ட அறிக்கையின் நிபந்தனைகளின்படி 1929-47 வருஷத்திற்குரியயுத்தக்கடன் பத்திரங்களை மொத்தமாகவோ அல்லது அதில் ஒரு பாகத்தையோ 15—8—29ம் தேதியன்றோ அதற்குப் பிறகோ மீட்டுக்கொள்ளச் சர்க்காருக்கு உரிமையுண்டு. அதற்காகக் கெஜட்டில் 3மாத நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அதன்படி அப்பத்திரங்களுக்குரிய மொத்தத் தொகையும் 15—5—33ம் தேதியன்று அத் தேதி வரையில் சேரும் வட்டியோடு திருப்பிக் கொடுக்கப்படும் என்று சர்க்கார் இப்போது அறிவிக்கின்றனர். அந்தத் தேதிக்குப் பிறகு அப்பத்திரங்களுக்கு வட்டி சேர்க்கப்படாது.

1933-36ம் வருஷத்திற்குரிய 100-க்கு 6 வீதம் வட்டியுடைய கடன் பத்திரங்களை மொத்தமாகவோ, அல்லது அதில் ஒரு பாகத்தையோ கெஜட்டில் 3 மாதம் நோட்டீஸ் பிரசுரித்த பிறகு 15-8-33ம் தேதியன்றோ அதற்குப் பிறகோ மீட்டுக்கொள்ளவும் சர்க்காருக்கு உரிமை யிருக்கின்றது. அதன்படி, 5-8-33ம் தேதி யன்று மேற்படி பத்திரங்களுக்குரிய தொகைகள் மொத்தமும் அத்தேதி வரையில் சேரும் வட்டியோடு திருப்பியளிக்கப்படும் என்று சர்க்கார் இப்போது அறிவிக்கின்றனர். அத் தேதிக்குப் பிறகு அத்தொகைகளுக்கு வட்டி சேர்க்கப்படமாட்டாது."

——

கும்பகோணம்

மகாமகம்

உற்சவத்திற்கு

(3—3—1933 முதல் 13—3—1933 வரையில்)

விஜயம் செய்யுங்கள்.

மகாமக குளத்தில்

ஸ்நானம் 10-3-1933

12 வருடத்திற்கு ஒரு முறை வரும் பெரிய திருவிழா.

அத்துடன் கீழ்கண்ட ஸ்தலங்களுக்கும் விஜயம்செய்யுங்கள்.

காஞ்சிவரம்	ஸ்ரீரங்கம்
சிதம்பரம்	மதுரை
தஞ்சாவூர்	ராமேஸ்வரம்

விபரங்களுக்கும், பிரசுரங்களுக்கும், திருச்சினப்பள்ளியிலிருக்கும் சீப் கம்மர்ஷியல் சூப்பிரண்டெண்டுக்கு எழுதுங்கள்.

தென்னிந்திய ரயில்வே கம்பெனி லிமிடெட்.,

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது.)

Printed at the Sri Nilayam Press, Trichinoply. Edited & Published by T. V. K. Naidu at the office of "Varthaga Oolian" S. V. S. Buildings, Big Bazaar St. Trichinopoly.